Winmeen's

9 ஆம் வகுப்பு தமிழ்
மூன்றாம் பருவம்
பாடக்குறிப்புகள்

9 ஆம் வகுப்பு தமிழ் – மூன்றாம் பருவம் - பாடக்குறிப்புகள்

பொருளடக்கம்

வ.எண்	பொருண்மை, இயல்	பாடத்தலைப்புகள்
1	நாடு, சமூகம், அரசு, நிருவாகம் வாழிய நிலனே	பழந்தமிழர் சமூக வாழ்க்கை சீவக சிந்தாமணி * முத்தொள்ளாயிரம் * இந்திய தேசிய இராணுவத்தில் தமிழர் பங்கு பொருளிலக்கணம்
2	அறம், தத்துவம், சிந்தனை என்தலைக் கடனே	பெரியாரின் சிந்தனைகள் ஒளியின் அழைப்பு தாவோ தே ஜிங் யசோதர காவியம் * மகனுக்கு எழுதிய கடிதம் யாப்பிலக்கணம்
3	மனிதம், ஆளுமை அன்பெனும் அறனே	விரிவாகும் ஆளுமை அக்கறை * குறுந்தொகை தாய்மைக்கு வறட்சி இல்லை அணியிலக்கணம் திருக்குறள்

1. பழந்தமிழர் சமூக வாழ்க்கை

1. சரியான விடையைத் தேர்ந்தெடுத்துக எழுதுக

1. முல்லைத் திணைக்கு உரிய தெய்வம் ……………………

அ) இந்திரன் **ஆ) திருமால்** இ) முருகன் ஈ) வருணன்

2. குறிஞ்சிக்கு உரிய தெய்வம் ……………………

அ) வருணன் **ஆ) முருகன்** இ) திருமால் ஈ) இந்திரன்

3. மருதத்திற்கு உரிய தெய்வம் ……………………

அ) திருமால் ஆ) முருகன் இ) வருணன் **ஈ) இந்திரன்**

4. நெய்தலுக்கு உரிய தெய்வம் ....

அ) முருகன் **ஆ) வருணன்** இ) இந்திரன் ஈ) திருமால்

5. வெற்றிக்குத் தெய்வம் ....

அ) இலக்குமி ஆ) கலைமகள் **இ) கொற்றவை** ஈ) மலைமகள்

6. கஞ்சுகம் என்பது எதைக் குறிப்பது ?

அ) கிளியை ஆ) பாத்திரத்தை இ) காற்சட்டையை **ஈ) மேற்சட்டையை**

7. அம்மானை என்பது ....

அ) வேட்டையாடுதல் ஆ) ஆண்கள் விளையாட்டு

இ) பெண்கள் விளையாட்டு ஈ) ஒருவகை விலங்கு

<u>சிறுவினாக்கள்</u>

1. தமிழர்களின் திணை நிலத் தெய்வங்களைக் குறிப்பிடுக

குறிஞ்சி நிலத் தெய்வம் முருகன். முல்லை நிலத் தெய்வம் திருமால். மருத நிலத் தெய்வம் இந்திரன். நெய்தல் நிலத் தெய்வம் வருணன். பாலை நிலத் தெய்வம் கொற்றவை.

2. பழந்தமிழர் விழாக்களைக் குறிக்க

பழந்தமிழர் விழாக்கள், தைத்திங்கள் நோன்பு, தைந்நீராடல், கார்த்திகைத் திருநாள், திருவாதிரை விழா, பங்குனி உத்திரவிழா, இந்திர விழா, வேலன் வெறியாட்டு விழா, இளவேனில் விழா என்பன.

3. பண்டைத் தமிழர் பழக்கவழக்கங்களைக் குறிப்பிடுக

பண்டைத் தமிழர் தீமூட்டுவதற்குக் கல்லை உரசினர்; ஞாயிறு நிலவு, வீண்மீன், கோள்கள் நிலை, மலர்கள் பூக்கும் வேளை ஆகியவற்றைக் கொண்டு நேரத்தையும் காலத்தையும் கணக்கிட்டனர்; இறந்தவர்களை முதுமக்கள் தாழியில் இட்டுப் புதைத்தனர்; விருந்தினரை வீட்டின் வாசல் வரை வெளியே வந்து வழியனுப்பினர்.

4. சங்கத் தமிழர் அணிகலன் பற்றி எழுதுக

சங்கத் தமிழர்கள் உலோகங்களாலும் விலையுர்ந்த கற்களாலும் ஆன அணிகலன்களை அணிந்தனர். சிலம்பு, மேகலை, குழை, மோதிரம், கடகம் முதலானவற்றைப் பெண்கள் அணிந்து மகிழ்ந்தனர். சிறுவர் ‘ஐம்படைத்தாலி’ என்னும் கழுத்தணியை அணிந்தனர்.

5. பழந்தமிழ் இசை நூல்கள் சிலவற்றைக் குறிப்பிடுக

பழந்தமிழ் இசை நூல்கள் பஞ்சமரபு, முதுநாரை, முதுகுருகு, பெருநாரை, பெருங்குருகு, பஞ்ச பாரதீயம், இசைநுணுக்கம் என்பன.

6. தமிழர் சமுதாயம் எவ்வகைப் பண்புகளோடு உயர்ந்திருந்தது?

தமிழர் சமுதாயம், அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை என்னும் பண்புடன் விளங்கியது; உண்பது நாழி உடுப்பவை இரண்டே என்னும் எளிய வாழ்க்கையைப் பின்பற்றியது; வீட்டிற்கு வந்த விருந்தினரை உபசரித்து அனுப்பிவிட்டு அடுத்துவரும் விருந்தினரை எதிர்பார்க்கும் உயர் பண்பு மிக்கதாய்த் திகழ்ந்தது; வாணிகம் செய்வதில் கொள்வதும் அளவுகடந்து கொள்ளாது, கொடுப்பதும் குறைவுபடக் கொடுக்காது வாழும் கொள்கைச் சிறப்புடன் இருந்தது. போர்களத்தில் யானையை வீழ்த்துவதை வீரமாகக் கருதியது; தம்மிடம் அன்புடையவர்களுக்குத் தமது உடம்பையும் கொடுக்கும் தூய அன்போமு வாழ்ந்தது; யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற உலகப் பொதுமையில் உயர்ந்து விளங்கியது.

7. தமிழர் வழிபாட்டு முறைகளை விவரிக்க

தமிழர், திணைநிலத் தெய்வ வழிபாடு, இயற்கை வழிபாடு, நடுகல் வழிபாடு ஆகியவற்றைத் தம்முடைய வழிபாடுகளாய்க் கொண்டிருந்தனர். குறிஞ்சிக்கு முருகனையும், முல்லைக்குத் திருமாலையும், மருதத்திற்கு இந்திரனையும், நெய்தலுக்கு வருணனையும், பாலைக்குக் கொற்றவையையும் தெய்வங்களாய்க் கொண்டு வழிபட்டனர்.

வெற்றியைக் கொண்டாடக் கொற்றை என்னும் பெண் தெய்வத்தை வணங்கும் மரபிருந்தது. இயற்கைப் பொருள்களான ஞாயிறு, நிலவு, நெருப்பு முதலானவற்றையும் அவர்கள் வணங்கினார்கள். வீரத்தை உணர்த்த வீரர்களுக்கு 'நடுகல் வழிபாடு' செய்வதும் வழக்கத்தில் இருந்தது.

8. சங்ககாலச் சமுதாய மக்கள் அணிந்த ஆடை ஆழகை விவரிக்க.

சங்ககாலச் சமுதாய மக்கள் நேர்த்தியும் அழகும் மிக்க பல்வேறு வகையான ஆடைகளை அணிந்திருந்தனர். ஆடவர், இடையில் ஓர் ஆடையும் மேலே ஒரு துண்டும் அணிந்தனர்; மேற்சட்டையைக் 'கஞ்சுகம்' என்றனர். பெண்கள் புடவை அணிந்தனர். பட்டு, பருத்தியாலான ஆடைகளை அனைவரும் பயன்படுத்தினர். மெல்லிய இழைகளால் நெய்யப்பட்ட ஆடைகள் பாம்பின் சட்டையைப்போலவும், புகையைப்போலவும், பாலாவிபோலவும் விளங்கின. துணிகளுக்கு வண்ணம் ஏற்றும் கலையையும் பழந்தமிழர் அறிந்திருந்தனர். (துணி தைக்கும் பழக்கமும் இருந்தது. துணி தைப்பவர், 'துன்னக்காரர் ' எனப்பட்டார்)

9. பழந்தமிழ் பொழுதுபோக்கு நிகழ்வுகள், விளையாட்டுகள் பற்றி எழுதுக

'ஏறு தழுவுதல்' ஆண்மகனின் வீரத்தைக் காட்டுவதாய் இருந்தது. மற்றொரு சிறந்த வீரவிளையாட்டு மற்போரிடல். கிராமப்புறங்களில் கோழிச் சண்டையும் ஆட்டுக்கிடாய்ச் சண்டையும் நடைபெற்றன. யானைச் சண்டை நடைபெறுவதும் வழக்கத்தில் இருந்துள்ளது.

நகர்ப்புற மக்கள் இசை, நாட்டியம், நாடகம் ஆகியவற்றைக் கண்டு பொழுதுபோக்கினர். பெண்கள் கழங்காடல், அம்மானை, பந்தாடுதல், ஓரையாடுதல் முதலான விளையாட்டுகளில் ஈடுபட்டார்கள்.

10. பழந்தமிழர் உணவுகள் பற்றி எழுதுக

பழந்தமிழர் உணவு இயற்கை உணவாய் அமைந்திருந்தது; உடலைப் பாதுகாப்பதாய் விளங்கியது; மருந்தாயும் இருந்தது. அவரவர் வாழும் இடங்களுக்குத் தக்கபடி உணவு முறைகள் வேறுபட்டிருந்தன. தமிழர் காய்கனி, இறைச்சி என இருவகை உணவையும் உட்கொண்டனர்; நெல் சோற்றை நண்டுக் கறியோடும் உண்டனர்; நெல் சோற்றைக் காய்கறியோடும் உண்டனர்; அரிசி, தினை, வரகு போன்றவற்றையும் உணவாய்ப் பயன்படுத்தினர். கடுகு இட்டுத் தாளிக்கும் பழக்கமும் ஊறுகாய் போடும் பழக்கமும் நடைமுறையில் இருந்தன.

11. பண்டைத் தமிழர் திருமண முறை பற்றி எழுதுக

பழந்தமிழர் வாழ்வு அகம் புறம் என இருதிறப்பட்டதாய் இருந்தது. அக வாழ்வைப் பாடுவது 'அன்பின் ஐந்திணை ' எனப்பட்டது. பெண்ணுக்கு மணமகன் பரிசம் அளிப்பது வழக்கத்தில் இருந்தது. மண நிகழ்வின்போது மணமக்களை நெல்லும் மலரும் கலந்த நீரால் நீராட்டித் தூய ஆடை அணிகலன்களை அணிவித்தனர். மணமுழவு ஒலிக்க மணமகளை மணமகனிடம் தந்து மூத்தோர் வாழ்த்துரை வழங்கினர்.

12. பழந்தமிழர் இல்லற வாழ்வின் சிறப்பினை எழுதுக.

பழந்தமிழர் வாழ்க்கை அறம் சார்ந்து விளங்கியது. அதனால் குடும்ப வாழ்கை இல்லறம் எனப்பட்டது. விருந்தினரை உபசரித்தல், சுற்றத்தினரைப் பேணுதல், ஏழைகள் துயரத்தைப் போக்குதல் ஆகியவை இல்லறத்தாரின் கடமைகளாய் இருந்தன. இவ்வாழ்க்கையில் அன்பு விளங்கியது. செம்மண் நிலத்தில் பெய்த மழைநீர் நிலத்தின் தன்மையை ஏற்றுக் கலந்து விடுவது போல் தலைவன் தலையியர் மனங்கள் ஒன்றுபட்டு அன்புடன் வாழ்ந்தனர். 'இந்தப் பிறப்புக்குப் பிறகு மறு பிறப்பிலும் நீயே என் கணவன்' என மனைவி வாழ்ந்தாள். தலைவனோ தலை நரைத்து முதுமை அடைந்த நிலையிலும் இளமைக்காலத்துக் கொண்டிருந்த அன்புடன் மனைவியைப் பாதுகாத்தான். அறிவு நிறைந்த மக்களைப் பெறுவதே இல்லறத்தின் நற்பேறு எனப் பழந்தமிழர் வாழ்ந்தனர்.

13. பழந்தமிழகத்துக் கல்வி நிலை பற்றி எழுதுக

திருக்குறளில் கல்வி, கேள்வி, அறிவுடைமை முதலான அதிகாரங்கள், அக்காலக் கல்வியின் சிறப்பை விளக்குவன. பதினெண்கீழ்க்கணக்கில் அமைந்த வேறு நூல்களிலும் கல்வியின் சிறப்பு விளக்கப்பட்டுள்ளது. எண்ணும் எழுத்தும் கண்ணெனக் போற்றப்பட்டன. இவற்றுடன் வானியல், மருத்துவம் போன்றவையும் கற்பிக்கப்பட்டன. கல்வி ஒருவனுக்கு உயிர்வளிக்கும் என உறுதியாக நம்பியதால் எக்குடிப்பிறப்பினும் யாவரே ஆயினும் அக்குடியில் கற்றோரை மதித்தனர். வீட்டுத் திண்ணைகளும் அமைந்திருந்தன. பனையோலையில் எழுத்தாணி கொண்டு எழுதும் பழக்கம் இருந்தது.

14. பழந்தமிழர் சமூகத்தின் தொழில் பற்றி விவரிக்க.

பழந்தமிழர் சமூகத்தில் பல்வேறு தொழில் பிரிவினர் இருந்தனர். உழவுத்தொழில் முதன்மையான தொழிலாய் இருந்தது. தச்சுத் தொழில் மேலோங்கி இருந்தது. தேர், வண்டி, நாவாய்கள், படகுகள், வீடுகளுக்கான தூண்கள், கதவுகள் முதலான பல பொருள்கள் செய்யப்பட்டன. இரும்பாலும் பொன்னாலும் கருவிகள் நகைகள் செய்யப்பட்டன. உமணர் ஊர் ஊராகச் சென்று உப்பு வணிகம் செய்தனர். மீன்பிடிக்கும் தொழில் பற்றிய குறிப்புகள் மிகுதியாய்க் காணப்படுகின்றன. வேறு பலவகையான சிறுதொழில்கள் செய்தவரும் இருந்தனர்.

பழமொழித் தொகுப்பு

அ) பழக்க வழக்கங்கள்

1. ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி
2. கூழானாலும் குளித்துக் குடி
3. கோழி கூவியா பொழுது விடியப் போகிறது?
4. பருவத்தே பயிர் செய்.
5. உயர்ந்த உடுப்பு அயர்ந்த அடுப்பு

ஆ) நம்பிக்கைகள்

1. வீட்டு மாடியில் காக்கை கரைந்தால் விருந்துவரும்.
2. திங்கட்கிழமை துக்கம் கேட்கப் போகக் கூடாது.
3. கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொடுக்கும்.
4. ஒரு முறை தவறினால் மூன்று முறை தவறும்.
5. வாசலில் கோலம் இட்டால் செல்வம் சேரும்.

சீவக சிந்தாமணி

1. சீவக சிந்தாமணிக் காப்பியத்தின் உட்பிரிவுக்கு .... என்று பெயர்.

அ) அத்தியாயம் **ஆ) இலம்பகம்** இ) காதை ஈ) படலம்

2. விருத்தப் பாக்களால் இயற்றப்பட்ட முதற் காப்பியம் ....

அ) கம்பராமயணம் ஆ) சிலப்பதிகாரம்

இ) சீவகசிந்தாமணி ஈ) மணிமேகலை

3. தொடை கீறி – இலக்கணக் குறிப்புத் தருக

அ) இரண்டாம் வேற்றுமைத் தொகை ஆ) இரண்டாம் வேற்றுமை விரி

இ) பெயரெச்சத் தொடர் ஈ) வினையெச்சத் தொடர்

4. பொருந்தாததைக் கண்டறிக

அ) வருக்கை – பலாப்பழம் ஆ) குப்பை – குவியல்

இ) வெறி – மணம் **ஈ) அடிசில் – சிறுகல்**

சிறுவினாக்கள்

1. ஐம்பெருங்காப்பியங்கள் யாவை?

ஐம்பெரும் காப்பியங்கள்: சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி, சீவகசிந்தாமணி.

2. சீவகசிந்தாமணி பற்றிக் குறிப்புத் தருக

சீவக சிந்தாமணி ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று. இது விருத்தப்பாக்களால் இயற்றப்பட்ட முதல் காப்பியம். 'இலம்பகம்' என்ற உட்பிரிவுகளைக் கொண்டது. 13 இலம்பகங்களைக் கொண்டுள்ள இந்நூல் 'மணநூல்' எனவும் அழைக்கப்படுகிறது. இதன் ஆசிரியர் திருத்தக்க தேவர்.

3. ஏமாங்கத நாட்டில் தேங்காய் கீழே விழுவதால் ஏற்படும் தொடர் நிகழ்வுகள் யாவை?

தென்னை மரத்திலிருந்து நன்றாக முற்றிய காய் விழுந்தது. அது விழுந்த வேகத்தில் பாக்கு மரத்தின் உச்சியில் உள்ள சுவைமிக்க தேனடையைக் கிழித்து, பலாப் பழத்தினைப் பிளந்து, மாங்கனியைச் சிதற வைத்து. வாழைப் பழத்தினை உதிர்க்கவும் செய்தது. தேங்காய் கீழே விழுவதால் அமைந்த தொடர் நிகழ்வுகள் இவையே ஆகும்.

4. வெள்ளத்தின் வருகையைச் சீவக சிந்தாமணி எவ்வாறு விவரிக்கிறது?

இரந்து கேட்பவர்க்கு இல்லையென்னாது வாரி வழங்கும் செல்வர்களைப் போன்றது வெள்ளம். அது உயர்ந்த மலையிலிருந்து வெல்லக் குவியலைக் சேர்த்துக் கொண்டு வந்தது. ஊக்கமில்லாத மக்களுக்கு ஊர்தோறும் வழங்கும் வகையில் நாட்டினுள் விரைந்து பாய்ந்தது எனச் சீவகசிந்தாமணி கூறிகிறது.

5. ஏமாங்கத நாடு யார் யார்க்கெல்லாம் இடமாக விளங்கியது?

winmeen.com

ஏமாங்கத நாடு, உண்மையான தவம் புரிவோர்க்கும் இல்லறம் நடத்துவோர்க்கும் இனிய இடம். நிலையான பொருளைத் தேடுவோர்க்கும் நிலையில்லாத பொருட்செல்வத்தைத் தேடுவோர்க்கும் உகந்த இட.

6. நெற்பயிர் விளைவைச் சீவகசிந்தாமணி எங்ஙணம் கூறிகிறது?

கருக்கொண்ட பச்சைப் பாம்புபோல நெற்பயிர்கள் தோற்றம் கொண்டுள்ளன. நெற்பயிர்கள் கதிர்விட்டு நிமிர்ந்து நிற்பது, பக்குவம் இல்லாதவர் செல்வம் பெற்ற நிலையில் தலைநிமிர்ந்து நிற்பது போல் உள்ளது. அப்பயிர்கள் முற்றியவுடன் நெற்கதிர்கள் சாய்ந்திருப்பது, தெளிந்த நூலைக் கற்ற நல்லவர்களின் பணிவைப்போல் உள்ளது என நெற்பயில் விளைவைச் சீவகசிந்தாமணி கூறுகிறது.

7. ஏமாங்கத நாட்டில் ஆயிரம் ஆயிரமாய் விளங்கியவை யாவை?

வளம் நிறைந்த ஏமாங்கத நாட்டிலுள்ள ஊர்களில் நாள்தோறும் ஆயிரம் வகையான உணவுகள் கிடைத்தன. உணவளிக்கும் அறச்சாலைகள் ஆயிரம் இருந்தன; மகளிர் ஒப்பனை செய்துகொள்ள மணிமாடங்கள் ஆயிரம் இருந்தன; செய்தொழிலில் சிறிதும் சோம்பல் இல்லாத கம்மியர் ஆயிரம்பேர் இருந்தனர். அங்கே நிகழும் திருமணங்களும் ஆயிரமாய் இருந்தன. ஏமாங்கத நாட்டில் இல்லாதன இல்லை என்னும் வகையில் ஆயிரக்கணக்கான நிகழ்வுகள் குறைவின்றி நிகழ்ந்தன.

உவமைகளை விளக்குக

அ) வள்ளல் கைத்தல மாந்தரின்

இரந்து கேட்பவர்கது இல்லையென்னாது வாரி வழங்கும் செல்வர்களைப் போன்றது வெள்ளம். அது உயர்ந்த மலையிலிருந்து செல்வக் குவியலைச் சேர்த்துக் கொண்டு வந்து, ஊக்கமில்லாத மக்களுக்கு ஊர்தோறும் வழங்கும் வகையில் நாட்டினுள் விரைந்து பாய்ந்தது.

ஆ) சூல்பசும் பாம்பின் தோற்றம் போல்

கருக்கொண்ட பச்சைப் பாம்பினைப் போல் நெற்பயிரானது தோற்றம் கொண்டிருந்தது.

இ) மேல் அலார் செல்வமே போல்.

பக்குவம் இல்லாதவர் செல்வம் பெற்ற நிலையில் தலை நிமிர்ந்து நிற்பது போல் நெற்பயிர் கதிர்விட்டு நிமிர்ந்து நிற்கிறது.

ஈ) தேர்ந்த நூற்கல்விசேர் மாந்தரின்.

நெற்களிர் முற்றிய நிலையில் சாய்ந்திருப்பது தெளிந்த நூலைக் கற்ற நல்லவர்களின் பணிவைப் போல் காணப்படும்.

இலக்கணக் குறிப்பு

தீந்தேன்	-	உரிச்சொல் தொடர்

வீழ, கீறி, போழ்ந்து, சிதறி, மடுத்து, இருந்து, ஈன்று, நிறுவி, இறைஞ்சி – இறந்த கால வினையெச்சங்கள்

கொழுநிதி	-	வினைத்தொகை
விரைந்தது	-	இறந்தகால ஒன்றன்பால் வினைமுற்று
ஏற்றினம்	-	ஆறாம் வேற்றுமைத் தொகை
உறீஇ	-	சொல்லிசை அளபெடை
பசும்பாம்பு, நற்றவம், நற்பொருள்	-	பண்புத் தொகைகள்
காய்த்தவே	-	இறந்தகாலப் பலவின் பால் வினைமுற்று
செய் கோலம்	-	வினைத் தொகை
விழைவிப்பான்	-	'பான்' ஈற்று வினையெச்சம்
சிந்தும், வைகும்	-	செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்றுகள்

பகுபத உறுப்பிலக்கணம்

கீறி : கீறு + இ

கீறு – பகுதி; இ – வினையெச்ச விகுதி; விகுதி இறந்தகாலம் காட்டியது.

போழ்ந்து : போழ் + த்(ந்) + த் + உ

போழ் – பகுதி; த் – சந்தி; ந் – ஆனது விகாரம்; த் – இறந்த கால இடைநிலை; உ – வினையெச்ச விகுதி

சிதறி : சிதறு + இ

சிதறு – பகுதி; இ – வினையெச்ச விகுதி

விகுதி இறந்த காலம் காட்டியது

கொண்ட : கொள் (ண்) + ட் + அ

கொள் – பகுதி; ள் – ண் ஆகியது விகாரம்; ட் இறந்தகால இடைநிலை; அ - பெயரெச்ச விகுதி

மடுத்து : மடு + த் + த் + உ

மடு – பகுதி; த் – சந்தி; த் – இறந்தகால இடைநிலை;

உ – வினையெச்ச விகுதி

விரைந்தது : விரை + த்(ந்) + த் + அ + து

விரை – பகுதி; த் – சந்தி; த் – ந் ஆனது விகாரம்; த் – இறந்தகால இடைநிலை;

அ – சாரியை; து – ஒன்றன் பால் வினைமுற்று விகுதி

புக்கு : புகு (புக்கு) + உ

புகு – பகுதி; புகு – பகுதி ஒற்று இரட்டித்து இறந்தகாலம் காட்டியது;

உ – வினையெச்ச விகுதி

இருந்து : இரு + த் (ந்) + த் + உ

இரு – பகுதி; த் – சந்தி; த் – ந் ஆனது விகாரம்;

த் – இறந்தகால இடைநிலை; உ – வினையெச்ச விகுதி

ஈன்று : ஈன் + ற் + உ

ஈன் – பகுதி; ற் – இறந்தகால இடைநிலை;

உ – வினையெச்ச விகுதி

நிறுவி : நிறுவு + இ

நிறுவு – பகுதி; இ – வினையெச்ச விகுதி; விகுதி இறந்தகாலம் காட்டியது.

இறைஞ்சி : இறைஞ்சு + இ

இறைஞ்சு – பகுதி; இ – வினையெச்ச விகுதி; விகுதி இறந்தகாலம் காட்டியது

காய்ந்த : காய் + த் + த் + அ

காய் – பகுதி; த் – சந்தி; த் – இறந்தகால இடைநிலை;

அ – பலவின்பால் வினைமுற்று விகுதி

ஓம்புவார் : ஓம்பு + வ் + ஆர்

ஓம்பு – பகுதி; வ் – எதிர்கால இடைநிலை; ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி

விழைவிப்பான் : விழைவி + ப் + பான்

விழைவி – பகுதி; ப் – சந்தி; பான் – 'பான்' ஈற்று வினையெச்ச விகுதி.

விகுதி எதிர்காலம் காட்டியது

வைகும் : வைகு + உம்

வைகு – பகுதி; உம் – செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று விகுதி

விகுதி எதிர்காலம் காட்டியது.

முத்தொள்ளாயிரம்

1. சரியான விடையைத் தேர்வு செய்க

1. பழனம் என்னும் சொல்லுக்கு ……………… என்பது பொருள்

அ) காடு ஆ) கூடு இ) பழங்கள் **ஈ) வயல்**

2. கிள்ளி நாடு எது?

அ) சேர நாடு **ஆ) சோழ நாடு** இ) பல்லவ நாடு ஈ) பாண்டிய நாடு

3. பாண்டிய நாடு …………………… உடைய நாடு எனப் போற்றப்படுகிறது.

அ) சோறு ஆ) தந்தம் இ) பவழம் **ஈ) முத்து**

4. முத்தொள்ளாயிரச் செய்யுள்கள் ………………… என்னும் நூலிலிருந்து கிடைத்துள்ளன.

அ) குறுந்தொகை **ஆ) புறத்திரட்டு**

இ) புறப்பொருள் வெண்பாமாலை ஈ) பெருந்தொகை

சிறுவினாக்கள்

1. முத்தொள்ளாயிரம் – நூற்குறிப்புத் தருக

வெண்பாவால் எழுதப்பட்ட நூல் முத்தொள்ளாயிரம்; மன்னர்களின் பெயர்களைக் குறிப்பிடாமல் சேர, சோழ, பாண்டியர் என்று பொதுவாய்ப் பாடுகிறது. மூன்று மன்னர்களைப் பாற்றிப் பாடப்பட்ட 900 பாடல்களைக் கொண்ட நூல் என்பதால் முத்தொள்ளாயிரம் என்று பெயர்பெற்றது. நூல் முழுமையாய்க் கிடைக்கவில்லை புறத்திரட்டு என்னும் நூலிருந்து 108 செய்யுள்கள் கிடைத்துள்ளன. அவை

முத்தொள்ளாயிரம் என்னும் பெயரில் பதிப்பிக்கப்படுள்ளன. ஆசிரியரின் பெயரை அறிய முடியவில்லை.

2. சேரநாட்டின் வீரச் சிறப்பு யாது?

சேறுபட்ட நீர்மிக்க வயல்களில் அரக்கு நிறத்தில் செவ்வாம்பல்கள் மெல்ல விரிந்தன. பூக்களைக் கண்ட நீர்ப்பறவைகள் 'தண்ணீரில் தீப்பிடித்துவிட்டது' என்று அஞ்சி விரைந்து தம் குஞ்சுகைச் சிறகுகளுக்குள் ஒடுக்கி வைத்துக் கொண்டன. பறவைகளின் இந்த அச்சம் தவிரச் சேர நாட்டில் வேறு அச்சம் இல்லை. பகைவர் அஞ்சும் வேலைக் கொண்டவன் சேரன்.

3. சோழநாடு ஏர்க்களச் சிறப்பும் போர்க்களச் சிறப்பும் வாய்ந்தது என்பதை முத்தொள்ளாயிரம் எங்ஙனம் விளங்குகிறது?

நெல்லை அறுவடை செய்து காக்கும் உழவர்கள் நெற்போர் மீதேறி நின்று பொண்டு மற்ற உழவர்களை 'நாவலோ' என்று கூவி அழைப்பர். இவ்வாறு அவர்கள் செய்வது வீரர்கள் போர்களத்தில் யானை மீது ஏறி நின்று கொண்டு மற்ற வீரர்களை 'நாவலோ' என்று அழைப்பது போலிருந்தது. யானைப் படைகளை உடைய சோழனது நாடு, வளமும் வீரமும் மிக்கது என முத்தொள்ளாயிரம் விளக்குகிறது.

4. பாண்டிய நாட்டின் முத்துவளம் முத்தொள்ளாயிரத்தில் எங்ஙனம் வருணிக்கப்பட்டுள்ளது?

சங்குகள் மணலில் ஈனுகின்ற முட்டைகள் முத்துகள் போல் இருக்கின்றன. தரையில் உதிர்ந்து கிடக்கும் புன்னை மொட்டுகள் முத்துகள் போல் இருக்கின்றன. பாக்கு மரத்தின் பாளையிலிருந்து சிந்தும் மணிகளும் முத்துகள் போல் இருக்கின்றன. முத்துகளால் ஆன வெண்கொற்றக் குடையை உடைய பாண்டியனது நாடு இத்தகைய முத்து வளம் மிக்கது.

5. 'அள்ளல் பழனத்து' எனத் தொடங்கும் முத்தொள்ளாயிரச் செய்யுளில் இடம் பெற்றுள்ள அணியை விளக்குக

"அள்ளல் பழனத்து" எனத் தொடங்கும் முத்தொள்ளாயிரச் செய்யுளில் இடம் பெற்றுள்ள அணி தற்குறிப்பேற்ற அணி.

அணி இலக்கணம் : இயல்பாக நிகழ்கின்ற ஒன்றின் மீது கவிஞர் தனது கற்பனையை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி எனப்படும்.

விளக்கம் : சேறுபட்ட நீர்மிக்க வயல்களில் அரங்கு நிறத்தில் செவ்வாம்பல்கள் விரிந்தன. பூக்களைக் கண்ட நீர்ப்பறவைகள் 'தண்ணீரில் தீப்பிடித்துவிட்டது' என்று அஞ்சி விரைந்து தம் குஞ்சுகளைச் சிறகுகளுக்குள் ஒடுங்கி வைத்துக் கொண்டன. பறவைகளின் இந்த அச்சம் தவிரச் சேர நாட்டில் வேறு அச்சம் இல்லை. பகைவர் அஞ்சும் வேலைக் கொண்டவன் சேரன்.

வயல்களில் செவ்வாம்பல் மலர்ந்திருப்பதும் பறவைகள் தம் சிறகுகளுக்குள் குஞ்சுகளை அடக்குவதும் இயல்பான நிகழ்ச்சிகள். மலர்களை நெருப்பாகக் கருதிப் பறவைகள் தம்முடைய குஞ்சுகளைச் சிறகுகளுக்குள் ஒடுக்கிக் கொண்டன எனக் கற்பனையை ஏற்றிக் கவிஞர் பாடியுள்ளார்.

6. 'காவல் உழவர்' என்னும் செய்யுளில் இடம் பெற்றுள்ள அணியை விளக்குக

'காவல் உழவர்' என்னும் செய்யுளில் இடம் பெற்றுள்ள அணி உவமை அணி.

அணி இலக்கணம் : ஒரு கருத்தை விளக்குவதற்காக மற்றொரு கருத்தை உவமையாக்கிக் கூறுவது உவமையணி ஆகும்.

விளக்கம் : நெல்லை அறுவடை செய்து காக்கும் உழவர்கள் நெற்போர் மீதேறி நின்று கொண்டு மற்ற உழவர்களை 'நாவலோ' என்று கூவி அழைப்பர். இவ்வாறு அவர்கள் செய்வது வீரர்கள் போர்க்களத்தில் யானை மீது ஏறி நின்று கொண்டு மற்ற வீரர்களை 'நாவலோ' என்று அழைப்பது போலிருந்தது. உழவர்களின் ஓசைக்கு உவமையாய் வீரர்களின் ஓசை கூறப்பட்டுள்ளது. உழவர்கள் நெற்போர் மீது நிற்பது வீரர் யானை மீது நிற்பது போன்றிருந்தது.

7. 'நந்தின் இளஞ்சினையும்' என்னும் செய்யுளில் இடம் பெற்றுள்ள அணி யாது? விளக்குக

'நந்தின் இளஞ்சினையும்' என்னும் செய்யுளில் இடம் பெற்றிருப்பது உவமை அணி.

அணி விளக்கம் : ஒன்றினை விளக்கிக் கூறுவதற்காக அதைப் போன்ற ஒன்றை உவமையாக்கிக் கூறுவது உவமை அணியாகும்.

விளக்கம்: சங்குகள் மணலில் ஈனுகின்ற முட்டைகள் முத்துகள் போல இருக்கின்றன. தரையில் உதிர்ந்து கிடக்கும் புன்னை மொட்டுகள் முத்துகள் போல் இருக்கின்றன. பாக்கு மரத்தின் பாளையிலிருந்து சிந்தும் மணிகளும் முத்துகள் போல் இருக்கின்றன. முத்துகளால் ஆன வெண்கொற்றக் குடையை உடைய பாண்டியனது நாடு இத்தகைய முத்து வளம் மிக்கது.

<u>இலக்கணக் குறிப்பு</u>

அரக்காம்பல், கைச்சிறகு	-	உவமைத் தொகைகள்
வெரீஇ	-	சொல்லிசை அளபெடை
உடைத்து	-	ஒன்றன்பால் வினைமுற்று
நச்சு	-	'நஞ்சு' என்பதன் வலித்தல் விகாரம்
ஏறி	-	இறந்தகாரல வினையெச்சம்
கொல்யானை, குவிமொட்டு, திகழ் முத்தம்	–	வினைத் தொகைகள்

நல்யானை, இளஞ்சினை, இளங்கமுகு, வெண்குடை – பண்புத் தொகைகள்

பந்தர் -பந்தல் என்பதன் கடைப் போலி

இசைக்கும், ஒடுக்கும், தோன்றும் - செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்றுகள்

<u>உறுப்பிலக்கணம் எழுதுக</u>

பட்டது : படு (பட்டு) + அ + து

படு – பகுதி; பட் என ஒற்று இரட்டித்து இறந்தகாலம் காட்டியது. அ – சாரியை;

து – ஒன்றன்பால் வினைமுற்று விகுதி.

ஒடுக்கும் : ஒடுக்கு + உம்

ஒடுக்கு – பகுதி; உம் – செய்யும் என்னும் வாய்பாட்டு விகுதி;

விகுதி எதிர்காலம் காட்டியது.

ஏறி : ஏறு + இ

ஏறு – பகுதி; இ – வினையெச்ச விகுதி;

விகுதி இறந்தகாலம் காட்டிணது.

இசைக்கும் : இசை + க் + கு + உம்

இசை – பகுதி; க் – சந்தி; கு – சாரியை;

உம் – செய்யும் என்னும் வாய்பாட்ட விகுதி. விகுதி எதிர்காலம் காட்டியது

சிந்தி : சிந்து + இ

சிந்து – பகுதி; இ – வினையெச்ச விகுதி;

விகுதி இறந்தகாலம் காட்டியது.

தோன்றும் : தோன்று + உம்

தோன்று – பகுதி; உம் – செய்யும் என்னும் வாய்பாட்டு விகுதி எதிர் காலம் காட்டியது.

<u>காந்தி அடிகள்</u>

1869 – காந்தி காபா காந்திக்கும் புத்லிபாய் எனும் அம்மையாருக்கும் மகனாய்ப் போர்பந்தரில் பிறந்தார்.

1887 – மெட்ரிகுலேஷன் தேர்வில் தேர்ச்சி பெற்றார்.

1891 – இங்கிலாந்தில் பாரிஸ்டர் பட்டம் பெற்றார்.

1906 - பிரம்மச்சரிய விரதம் மேற்கொண்டார்.

1909 – இந்திய சுயராஜ்யம் என்ற பத்திரிகையில் எழுதினார்.

1948 – காந்தி மறைவு

பொருளிலக்கணம்

1. பொருள் இலக்கணம் எத்தனை வகைப்படும்? விளக்குக

அகப்பொருள், புறப்பொருள் என்று பொருளிலக்கணம் இருவகைப்படும்.

தலைவனுக்கும் தலைவிக்கும் இடையில் உள்ள அன்பையும் வாழ்க்கை நிகழ்வுகளையும் கூறுவதே அகப்பொருள்.

அகம் சாராத அறம், பொருள், வீடு, கல்வி, வீரம், கொடை, புகழ் முதலியவற்றைப் பற்றிக் கூறுவது புறப்பொருள்.

அகப்பொருள் ஒழுக்கத்தைப் பற்றிக் கூறும் இலக்கணம் அகத்திணை எனவும் புறப்பொருள் ஒழுக்கத்தைப் பற்றிக் கூறும் இலக்கணம் புறத்திணை எனவும் அழைக்கப்டுகின்றன.

2. தொல்காப்பியர் காட்டும் அகத்தினை எத்தனை வகை? அவை யாவை?

தொல்காப்பியர் காட்டும் அகத்திணை ஏழுவகை. அவை கைக்கிளை, முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல், பெருந் திணை என்பன.

3. 'முதற்பொருள்' என்பது பற்றி எழுதுக

வாழ்வியல் நிகழ்வுகள் நடைபெறுவதற்கு அடிப்படையாய் அமைந்த நிலமும் பொழுதும் முதற்பொருள் ஆகும்.

4. நிலம் எத்தனை வகைப்படும் ? அவை யாவை?

நிலம் ஐந்து வகைப்படும். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பன.

5. குறிஞ்சியாவது யாது?

மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி எனப்படும்.

6. முல்லை யாவது யாது?

காடும் காடு சார்ந்த இடமும் முல்லை எனப்படும்.

7. மருதம் ஆவது யாது?

வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம் எனப்படும்.

8. நெய்தல் ஆவது யாது?

கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் எனப்படும்.

9. பாலை யாவது யாது?

சுரமும் சுரம் சார்ந்த இடமும் பாலை எனப்படும்.

10. ஒவ்வொரு திணைக்கும் உரிய ஒழுக்க முறைகள் யாவை?

குறிஞ்சித் திணைக்கு (நிலத்துக்கு) உரிய ஒழுக்கம்: தலைவனும் தலைவியும் உள்ளத்தால் இணைவது.

முல்லைத்திணைக்கு உரிய ஒழுக்கம்: தலைவன் வருகைக்காகத் தலைவி காத்திருத்தல்.

மருத நிலத்துக்கு உரிய ஒழுக்கம்: தலைவன் தலைவிக்கு இடையே ஏற்படும் சிறுபிணக்காகிய ஊடல்.

நெய்தல் திணை: கடலுக்குச் சென்ற தலைவன் உரிய பொழுதில் திரும்பாததற்குத் தலைவி வருந்தியிருத்தல்.

பாலை: தலைவன் தலைவியை விட்டுப் பிரிதல்.

11. பொழுது ஆவது யாது? அது எத்தனை வகை? அவை யாவை?

பொழுது என்பது நிகழ்ச்சி நடைபெறும் காலம் ஆகும். காலத்தைத் தமிழர் இரண்டாகப் பிரிப்பர். அவை பெரும்பொழுது, சிறுபொழுது எனப்படும்.

12. கருப் பொருள் : விளக்குக

ஒரு கவிதை நிகழ்வை உருவாக்கப் பயன்படும் வாழ்வியல் சார்ந்த பின்னணிப் பொருள்கள் கருப்பொருள்கள் ஆகும். ஒவ்வொரு திணைக்கும் இன்னின்ன கருப்பொருள்கள் அமையலாம் என்பதைத் தொல்காப்பியர் முதலான இலக்கண நூலார் கூறுகின்றனர். அவை தெய்வம், மக்கள், உணவு, விலங்கு, பறவை, பண், பறை, தொழில், யாழ், ஊர், நீர், பூ என்பனவாகும். இவை அனைத்தும் திணைக்கும் திணை வேறுபாடும்.

13. புறத்திணை யாவது யாது? அது எத்தனை? அவை யாவை?

புறத்திணை என்பது பொது வாழ்க்கை. அது ஏழு பிரிவுகளில் அடங்கும். அவை வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்வி, பாடாண் என்பன.

1. பாடலில் காணப்படும் நிலம், கருப்பொருள் ஆகியன பற்றி எழுதுக

நெறிமருப்பு எருமையின் ஒருத்தல் நீள்இனம்

செறிமருப்பு ஏற்றினம் சிலம்பப் பண் உறீஇப்

பொறிவரி வராலினம் இரியப் புக்குடன்

வெறிகமழ் கழனியுள் உழுநர் வெள்ளமே.

பாடலில் காணப்படும் நிலம்: மருதம்

பாடலில் காணப்படும் கருப்பொருள்கள் : எருமை, ஏறு, வரால் (விலங்குகள்), உழுநர் (மக்கள்)

2. திணையை உரிய நிகழ்வுடன் பொருத்துக

திணை	**நிகழ்வு**
உழிஞை	எதிர் நின்று போரிடுதல்
வஞ்சி	பசுக்கூட்டங்களைக் கவர்தலும் மீட்டலும்
பாடாண்	வலிமையை நம்பிப் போராடுதல்
தும்பை	ஒருவரின் மேன்மைகளைப் பாடுதல்
வெட்சி	பகை மன்னரின் கோட்டையை முற்றுகையிடல்

விடை:

திணை	**நிகழ்வு**
உழிஞை	பகை மன்னரின் கோட்டையை முற்றுகையிடல்
வஞ்சி	எதிர் நின்று போரிடுதல்
பாடாண்	ஒருவரின் மேன்மைகளைப் பாடுதல்
தும்பை	வலிமையை நம்பிப் போராடுதல்
வெட்சி	பசுக் கூட்டங்களைக் கவர்தலும் மீட்டலும்

3. தொல்காப்பியர் கூறும் புறத்திணைகளையும் ஒழுக்கங்களையும் அட்டவணைப்படுத்துக

திணை	**விளக்கம்**
1. வெட்சி	மன்னரின் ஆணைப்படி வீரர்கள் பகை நாட்டு ஆவின் கூட்டங்களைக் கவர்தலும், கவர்ந்தவற்றை மீட்டலும்.
2. வஞ்சி	மண்ணாசை கொண்டு அரசன் போர்தொடுத்தலும் மண்ணாசையுடன் வரும் பகையரசனோடு எதிர்நின்று போரிடுதலும்.
3. உழிஞை	பகை மன்னனின் கோட்டையை முற்றுகை இடுதலும், கோட்டையின் உள்ளிருக்கும் வேந்தன் கோட்டையைக் காத்தலும்.

4. தும்பை	தனது வலிமையை நம்பிப் போரிட வந்த மன்னனை எதிர்த்து வலிமையுடன் போரிடுதல்
5. வாகை	போர்வீரம் மட்டுமல்லாமல் பல்வேறு துறைகளிலும் மற்றவரிலிருந்து மேம்பாடு மிக்கவராய் தனித்து நிற்றல்.
6. காஞ்சி	நிலையாமையை உணர்த்துவது. நிலையற்ற இந்த உலகில் வாழ்த்து கொண்டே நிலையான வீட்டின்பம் அடைதற்காகப் பலவழிகளிலும் பொருந்திய நல்ல நெறியினை மேற்கொள்ளுதல்.
7. பாடாண்	ஒருவர் பெற்ற கல்வி, புகழ், ஈகை போன்ற மேம்பாடுகளைப் போற்றிப்பாடுதல்.

1. நில அமைப்புக்கும் தமிழர் வாழ்வுக்கும் உள்ள தொடர்பு, தற்காலத்தில் பொருந்துமா ?

நில அமைப்புக்கு தமிழர் வாழ்வுக்கம் உள்ள தொடர்பு, இக்காலத்தில் பொருந்தாது. ஒவ்வொரு நிலத்துக்கும் உரிய ஒழுக்க நெறி இது எனப் பாடியிருப்பது இலக்கிய உத்தியே தவிர நடைமுறை வாழ்க்கையை அல்ல. சேர்தல், காத்திருத்தல், சிறுபிணக்கும், இரங்குதல், பிரித்தல் என்னும் நிகழ்வுகள் எல்லா நிலங்களிலும் எல்லாக் காலத்தும் நடப்பவையே ஆகும். ஒவ்வொரு நிலத்துக்கும் பொழுதுகள் இவை கருப்பொருட்கள் இவை, உரிப்பொருள் இது என்பன கவிதை நிகழ்வை உருவாக்கப் பயன்படும் வாழ்வியல் சார்ந்த பின்னணியேயாகும்.

இலக்கண நூல்களில் சொல்லப்பட்டுள்ள கருப்பொருட்கள் இக்காலத்தில் நிலத்திற்கு நிலம் மாறுபட்டுவிட்டன. மக்கள் வாழ்க்கை நெறிகள் வேறுபட்டுவிட்டன. எனவே இவை இக்காலத்திற்குப் பொருந்துவது கடினம்.

2. காஞ்சித்திணைக்கும் பாடாண் திணைக்கும் உள்ள தொடர்பினைக் குறிப்பிடுக.

காஞ்சித்திணை என்பது நிலையாமை உணர்த்துவது. நிலையற்ற இந்த உலகில் வாழ்வது கொண்டே நிலையான சிறப்புடைய வீட்டின்பம் அடைவதற்காகப் பலவழிகளிலும் பொருந்திய நல்ல நெறியினை மேற்கொள்ளுதல்.

ஒருவர் பெற்ற கல்வி, புகழ், ஈகை போன்ற மேம்பாடுகளைப் போற்றிப் பாடுவது பாடான் திணையாகும்.

காஞ்சி மறுஉலக இன்பம் பற்றியது. பாடாண் இவ்வுலக இன்பம் சார்ந்தது. இரண்டு புறப்பொருள் திணைகளே.

3. ஆநிரை கவர்தலுக்கும் ஏறு தழுவுதலுக்குமான வேறுபாடுகளை எழுதுக.

ஆநிரை கவர்தல் வெட்சித்திணை: புறப்பொருட்கஙள் சார்ந்தது: போர் தொடங்குவதற்குமுன் பகைவரது நாட்டுக்குள் சென்று பசுக் கூட்டங்களைக் கவர்ந்து வரும் நிகழ்ச்சி இது: இரவில் நிகழ்வது: அரசனோடு

தொடர்புடையது: வீரர்களின் கூட்டு முயற்சி: வெட்சிப் போர் முடிவில் பசுக்களை பங்கிட்டு வீரர்கள் எடுத்துக் கொள்வர்.

ஏறு தழுவுதல் தமிழ்ர் வீர விளையாட்டு. இது முல்லை நிலத்தில் நிகழ்வது: தனி மனிதனின் வீரத்தைப் புலப்படுத்துவது: பலரும் கூடி நின்று காணும்படி பொது இடத்தில் நடப்பது: பகற்பொழுதில் நிகழ்த்துவது.

1. சரியான விடையைத் தெர்ந்தெடுத்து எழுதுக.

1. வேறுபட்ட குழுவினைக் கண்டறிக.

அ) சிலம்பு, மேகலை, குழை, கடகம்

ஆ) நோம்பு, நீராடல், திருநாள், விழா

இ) ஊசல், கழங்காடல், ஓரையாடல், அம்மானை

ஈ) கூத்து, பாடினி, இசை, சிற்பம்

2. சொல்லும் பொருளும் பொருந்தியுள்ளது எது?

அ) வருக்கை – இருக்கை ஆ) புள் – தாவரம்

இ) அள்ளல் – சேறு ஈ) மடிவு – தொடக்கம்

3. பாதிரி ஒத்த பூ, செய்கோலம் – இலக்கணக் குறிப்புத் தருக

அ) உருவகத்தொடர், வினைத்தொகை **ஆ) உவமைத்தொடர், வினைத்தொகை**

இ) வினைத்தொகை, பண்புத்தொகை ஈ) வினைத்தொகை, உருவகத்தொடர்

4. நக்சிலைவேல் கோக்கோதை நாடு, நல்யானைக் கோக்கிள்ளி நாடு – இத்தொடர்களில் குறிப்பிடப்படுகின்ற நாடுகள் முறையே,

அ) பாண்டிய நாடு, சேர நாடு ஆ) சோழ நாடு, சேர நாடு

இ) சேர நாடு, சோழ நாடு ஈ) சோழ நாடு, பாண்டிய நாடு

5. வெறிகமழ் கழனியுள் உழுநர் வெள்ளமே – இவ்வடி உணர்த்தும் பொருள் யாது?

அ) மணம் கமழும் வயலில் உழவர் வெள்ளமாய் உழுதிருந்தனர்

ஆ) வறண்ட வயலில் உழவர் வெள்ளமாய் அமர்ந்திருந்தனர்

இ) செறிவான வயலில் உழவர் வெள்ளமாய்க் கூடியிருந்தனர்

ஈ) பசுமையான வயலில் உழவர் வெள்ளமாய் நிறைந்திருந்தனர்

சிறுவினாக்கள்

1. கருக்கொண்ட பச்சைப் பாம்பு, எதற்கு உவமையாக்கப்பட்டுள்ளது?

கருக்கொண்ட பச்சை பாம்பு, பச்சை நெற்கதிருக்கு உவமையாக்கட்டுள்ளது

2. கொற்கை நகரில் முத்துகளைப் போல் உள்ள பொருள்களாகக் காட்டப்படுவன எவை?

கொற்கை நகரில் முத்துகளைப் போல் உள்ள பொருள்கள், சங்குப்பூச்சிகளின் முட்டைகள், புன்னைப்பூ மொட்டுகள், பாக்குப் பாளைகளிலிருந்து விழும் மணிகள் ஆகியன ஆகும்.

3. தமிழரின் சமூகவாழ்க்கை எதற்குச் சிறப்புடையதாகத் திகழ்கிறது?

தமிழரின் சமூக வாழ்க்கை, தாமும் வாழ்ந்து, தம்மைச் சுற்றியிருக்கும் அனைவரையும் வாழவைப்பதில் சிறப்புடையதாகத் திகழ்கிறது.

4. அள்ளல் பழனத்து அரக்காம்பல் வாய் அவிழ – இவ்வடியில் சேற்றையும் வயலையும் குறிக்கும் சொற்கள் யாவை?

சேற்றைக் குறிக்கும் சொல் அள்ளல். வயலைக் குறிக்கும் சொல் பழனம்.

5. நீங்கள் வாழும் நிலப் பகுதியின் திணை யாது?

நான் வாழும் நிலப்பகுதி மலையும் மலைசார்ந்த இடமும் ஆகிய திருப்பரங்குன்றம். இது குறிஞ்சித்திணை.

6. பழந்தமிழர் உலக மக்களை உறவினராய் எண்ணி வாழ்ந்தனர் – தொடர் உணர்த்தும் கருத்தை எழுதுக

பழந்தமிழர், தமது இனம் கடந்து, சமயம் கடந்து, மொழி கடந்து உலக மக்கள் அனைவரையும் உறவினராய் எண்ணி வாழ்ந்தனர். அதனால் அவர்கள் வாழ்வில் அருள் இருந்தது; அமைதி இருந்தது. யாரோடும் பகை கொள்ளவில்லையென்றால் போர் இருக்காது; புகழ் இருக்கும். ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்பதே தமிழர் நெறி.

7. தற்குறிப்பேற்ற அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக

‘அள்ளல் பழனத்து’ எனத் தொடங்கும் முத்தொள்ளாயிரச் செய்யுளில் இடம் பெற்றுள்ள அணி தற்குறிப்பேற்ற அணி.

அணி இலக்கணம் : இயல்பாக நிகழ்கின்ற ஒன்றின் மீது கவிஞன் தனது கற்பனையை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி எனப்படும்.

விளக்கம்: சேறுபட்ட நீர்மிக்க வயல்களில் அரசுக்கு நிறத்தில் செவ்வாம்பல்கள் விரிந்தன. பூக்களைக் கண்ட நீர்ப்பறவைகள் 'தண்ணீரில் தீப்பிடித்துவிட்டது' என்று அஞ்சி விரைந்து தம் குஞ்சுகளைச் சிறகுகளுக்குள் ஒடுக்கி வைத்துக் கொண்டன. பறவைகளின் இந்த அச்சம் தவிரச் சேர நாட்டில் வேறு அச்சம் இல்லை. பகைவர் அஞ்சும் வேலைக் கொண்டவன் சேரன்.

வயல்களில் செவ்வாம்பல் மலர்ந்திருப்பதும் பறவைகள் தம் சிறகுகளுக்குள் குஞ்சுகளை அடக்குவதும் இயல்பான நிகழ்ச்சிகள். மலர்களை நெருப்பாய்க் கருதிப் பறவைகள் தம்முடைய குஞ்சுகளைச் சிறகுகளுக்குள் ஒடுக்கி கொண்டன எனக் கற்பனைனை ஏற்றிக் கவிஞர் பாடியுள்ளார்.

8. புறப்பொருள் அமைந்த சங்க இலக்கிய நூல்களை அறிந்துதெழுதுக

புறப்பொருள் அமைந்த சங்க இலக்கிய நூல்கள் : திருமுருகாற்றுப் படை, பொருநர் ஆற்றுப்படை, சிறுபாண் ஆற்றுப்படை, மதுரைக் காஞ்சி, நெடுநால்வடை, பட்டினப்பாலை**,** மலைபடுகடாம், பதிற்றுப்பத்து, பரிபாடல், புறநானுறு.

9. சேர, சோழ பாண்டி நாட்டு வளங்களை முத்தொள்ளாயிரம் வழி விளக்குக.

சேறுபட்ட நீர்மிக்க வயல்களில் அரக்கு நிறத்தில் செவ்வாம்பல்கள் விரித்தன. புக்களைக் கண்ட நீர்ப்பறவைகள் 'தண்ணீரில் தீப்பிடித்துவிட்டது' என்று அஞ்சி விரைந்து தம் குஞ்சுகளைச் சிறகுகளுக்குள் ஒடுக்கி வைத்துக் கொண்டன. பறவைகளின் இந்த அச்சம் தவிரச் சேர நாட்டில் வேறு அச்சம் இல்லை. பகைவர் அஞ்சும் வேலைக் கொண்டவன் சேரன்.

நெல்லை அறுவடை செய்து காக்கும் உழவர்கள் நெற்போர் மீதேறி நின்று கொண்டு மற்ற உழவர்களை 'நாவலோ' என்றுகூவி அழைப்பர். இவ்வாறு அவர்கள் செய்வது வீரர்கள் போர்க்களத்தில் யானை மீது ஏறி நின்று கொண்டு மற்ற வீரர்களை 'நாவலோ' என்று அழைப்பது போலிருந்தது.

10. ஏமாங்கத நாட்டில் எவையெல்லாம் ஆயிரக் கணக்கில் இருப்பதாகத் திருத்தக்க தேவர் பாடியுள்ளார் ?

வளம் நிறைந்த ஏமாங்கத நாட்டில் ஊர்களில் நாள்தோறும் வகையான உணவுகள் ஒப்பனை செய்துகொள்ள மணிமாடங்கள் ஆயிரம் இருக்கின்றன: செய்தொழிலில் சிறிதும் சோம்பல் இல்லாத கம்மியர் ஆயிரம் உள்ளனர். அங்கே நிகழும்திருமணங்களும் ஆயிரமாக இருக்கின்றன. ஏமாங்கத நாட்டில் இல்லாதன இல்லை என்னும் வகையில், ஆயிரக்கணக்கான நிகழ்வுகள் குறைவின்றி நிகழ்கின்றன எனத் திருத்தக்க தேவர் பாடியுள்ளார்.

பொருத்தமான இடங்களில் அடைமொழியிட்டு, சொற்றொடரை விரிவாக்குக

1. புத்தகம் படிக்கலாம் (நல்ல, ஆழ்ந்து, நாளும், தேர்ந்து, மகிழ்ந்து, உயர்ந்து)
2. விளையாடுவது நன்று (ஓடியாடி, மாலையில், சேர்ந்து, திடலில், அனைவருடன்)

எ.கா: நல்ல புத்தகம் படிக்கலாம், நாளும் நல்ல புத்தகம் படிக்கலாம்.

விடை: 1. நாளும் நல்ல புத்தகம் தேர்ந்து மகிழ்ந்து ஆழ்ந்து உணர்ந்து படிக்கலாம்.

2. மலையில் அனைவருடன் சேர்ந்து திடலில் ஓடியாடி விளையாடுவது நன்று

பிழை நீக்குக

பெறுந்தலைவர் காமராசர் பள்ளிப் படிப்பை நிரைவு செய்யவிள்ளை எண்ராலும் தமிழலும் ஆங்கிலத்திலும் புத்தங்கள் படிக்கும் அலவுக்கு புலமைகள் பெற்றிருந்தது பலருக்குத் தெரியாது. ஆங்கிலச் செய்தி இதழ்கலை நாள்தோறும் படித்தது. எப்போது அரையை விட்டு வெளியே போனாலும் மின்விசிரியை நிருத்த மறப்பதில்லை. வெளியூருக்குச் செல்லும்போது தம்முடைய துணிமனிகளைத் தாமே எடுத்து வைத்துக்கொள்வார்.

விடை: பெ**ரு**ந்தலைவர் காமராசர் பள்ளிப் படிப்பை நி**றை**வு செய்யவில்**லை** எ**ன்றா**லும் தமிழிலும் ஆங்கிலத்திலும் புத்தகங்கள் படிக்கும் அ**ள**வுக்கு**ப்** பு**லமை** பெற்றிருந்தது பலருக்குத் தெரியாது. ஆங்கிலச் செய்தி இதழ்க**ளை** நாள்தோறும் **படித்தார்**. எப்போது அ**றை**யை விட்டு வெளியே போனாலும் மின்விசி**றி**யை நி**று**த்த மறப்பதில்லை. வெளியூருக்குச் செல்லும்போது தம்முடைய துணிம**ணி**களைத் தாமே எடுத்து வைத்துக் கொள்வார்.

நயம் பாராட்டல்

முன்னுரை:

உள்ளத்து உள்ளது கவிதை – இன்பம்
உருவெடுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில் – உண்மை
தெரிந்து உரைப்பது கவிதை

கவிதைக்கு இவ்வாறு இலக்கணம் கூறுவார் கவிமணி. 'ஆற்றல் நிரம்பிய சொற்கள் தாமாகப் பொங்கி வழிவதே கவிதை', 'கால்வாய் இல்லாத இடத்தில்' பெய்த ஒளிமழையே கவிதை'. எனவும் வெளிநாட்டார் கூறுவது உண்டு. இருபதாம் நூற்றாண்டில் தமிழ் நாட்டில் தோன்றிய பாரதி, பாரதிதாசன், கவிமணி, நாமக்கல்லார் என வரும் கவிஞர் வரிசையில் வாணிதாசனும் ஒருவர். அவரது கவிதை ஒன்று இங்குத் தரப்பட்டுள்ளது. அதன் நயங்களை இங்கே காண்போம்.

ஆசிரியர்:

கவிஞர் வாணிதாசம் புதுச்சேரிக்கு அருகில் உள்ள வில்லியனூரில் பிறந்தவர். இவரது இயற்பெயர் அரங்கசாமி. தமிழச்சி, கொடிமுல்லை, எழிலோவியம், தொடுவானம் முதலியன இவருடைய நூல்கள். காலம் 1915 – 1974.

கருத்து:

இந்தக் கவிதை ஒரு நதியை வருணிக்கிறது. கவிஞர் அதைப் பார்த்துக் கூறுகிறார்: "ஆறே! நீ வளைந்து வளைந்து கால்களால் ஓடி வயலிடையே புகுந்தாய்; நெற்கதிர்களை விளைத்தாய். பல பக்கங்களிலும் ஓடையாய்ச் சென்று தாமரை, கொட்டி, ஆம்பல் ஆகிய நீர்த்தாவரங்கள் செழித்து வளர்ந்து மலர்கள் இதழ் விரியும்படி செய்தாய்; கயல் என்னும் மீன் வகையும் சிவந்த கண்களையுடைய கறுப்பான வரால் என்னும் மீனும் வாளை மீனும் உனது கரையில் வளரும் தென்னை மரங்களில் பாயும்படி செய்தாய். மழை பொழியும்போது மேகம் சூழ்ந்த வானத்தைப் போல் விளங்கும் பெருங்குளத்தை உனது வெள்ளப் பெருக்கினால் நிறைத்து விட்டாய்.

சொல் நயம்:

'எழில் விருத்தம்' என்னும் நூலில் உள்ள கவிதை இது. ஆறானது வளைந்து செல்லும் 'கால்களால்' நடந்தது. 'கால்களால் ' என்னும் சொல் நடப்பதற்கு உதவும் கால்களையும் குறிக்கும். கால்வாய் – வாய்க்கால் என்னும் நீர் வழிகளையும் குறிக்கும். கவிஞரின் இந்தச் சொல்லாட்சி சிறப்புடையது.

எதுகை:

வயலிடை, அயலுள – ஆம்பலின், கயலிடை, பெயலிடை என நான்கு அடிகளிலும் 'அடி எதுகை' நன்கு அமைந்துள்ளது.

மோனை:

வயல்- வளைந்து, அயலுள – ஆம்பிலின், கயலிடை – கரைவளர், பெயலிடை – பெருங்குளம் என அடிதோறும் 1, 5 ஆம் சீர்களில் மோனை நயம் உள்ளது.

இந்தக் கவிதை எழுசீர் ஆசிரிய விருத்தம் என்னும் இலக்கணத்தில் அமைந்துள்ளது.

முடிவுரை:

ஆற்றைப் பாடாத கவிஞன் இல்லை. ஆற்றைப் பாடாதவன் கவிஞனே இல்லை என்பர். வாணிதாசன் இந்தக் கவிதை ஆறு தேனாய்ப் பாய்கிறது எனலாம்.

புதிர்

நான்கெழுத்துக்காரன்; முதல் இரண்டும் அம்மாவில் "மா"வைத் தொலைத்து நிற்கும்;
அடுத்த எழுத்தைச் சேர்த்தால் வில்லின் துணைவன்; கடை இரண்டும் கணக்கில் 'இது' என்பர்!
முழுதாய்ப் பார்த்தால் மேகத்திடை தெரிவான்!
அவன் யார்?
விடை: அம்புலி

அகராதியில் காண்க

ஈகை	–	கொடை	புகல்	-	அடைக்கலம்

குறும்பு	-	தொந்தரவு	மொய்ம்பு	-	வலிமை
கோன்	-	அரசன்			

பண்புத்தொகைகளை இட்டு நிறைவு செய்க

(இன்னோசை, பேரொளி, சிற்றோடை, பேரின்பம், பைங்கிளி, பேரூர், செந்தாமரை)

மானாமதுரை ஓர் அழகான **பேரூர்**. நீண்ட வயல்களும் **சிற்றோடை**களும் நிறைந்த அவ்வூரின் நடுவே வானுயர்ந்த கோபுரத்துடன் கூடிய கோவில் குளத்தில் எங்கும் **செந்தாமரைப்** பூக்கள் மலர்ந்துள்ளன; கதிரவனின் **பேரொளி** வீசிடச், சோலைப் **பைங்கிளி**களின் **இன்னோசை** கேட்போரைப் **பேரின்பம்** அடையச் செய்கிறது.

குறிப்புகளைக் கொண்டு மாவட்டத்தின் பெயரைக் கண்டுபிடிக்க.

1. தமிழக மாவட்டங்களுள் ஒன்று
2. கிழக்குக் கடற்கரைச் சாலையில் அமைந்துள்ள மாவட்டம்.
3. வங்காள விரிகுடாவின் கரைகளில் வேகமாக வளர்ந்து வரும் பெருநகரம் எனலாம்.
4. தொடர்வண்டி நிலையத்தோடு இணைக்கப்பட்ட புகழ்வாய்ந்த கடற்கரைத் துறைமுகம் இங்குள்ளது.
5. இந்தியாவிலேயே அதிகளவு பழுப்பு நிலக்கரி கிடைக்கும் சுரங்கம் உடைய ஊரைக் கொண்ட மாவட்டம்.
6. சுரபுன்னைக் காடுகளுடன் கூடிய ஏரி இம்மாவட்டத்தின் அழகான சுற்றுலாத்தலம் ஆகும்
7. போர்த்துக்கீசியர்கள் வணிகம் நடத்திய பழமையான 'பரங்கிப்பேட்டை' இங்குள்ளது.
8. வாடிய பயிரைக் கண்டபோது வாடிய 'பசிப்பிணி மருத்துவர்' பிறந்து வாழ்ந்த மாவட்டமும் இதுவே.
9. பாடல் பெற்ற பழைமையான பல கோவில்கள் நிறைந்த மாவட்டம்.
10. இயற்கைச் சீற்றங்களால் அடிக்கடி அல்லல்படும் மாவட்டம் எனில் மிகையில்லை.

விடை: கடலூர்

2. பெரியாரின் சிந்தனைகள்

1. சரியான விடையைத் தேர்வு செய்க

1. 'பெரியார்' என்றவுடன் நம்முடைய நினைவுக்கு வருவது அவரது ....

அ) பகுத்தறிவுக் கொள்கை ஆ) பெண் விடுதலைக் கொள்ளை

இ) மதுவிலக்குப் போராட்டம் ஈ) மொழிப் போர்

2. பெரியார் எதிர்த்தவை ....

அ) இந்தித்திணிப்பு, இராணுவக் கொள்கை **ஆ) இந்தித்திணிப்பு, குழந்தைத் திருமணம்**

இ) குலக்கல்வித் திட்டம், எழுத்துச் சீர்திருத்தம் ஈ) எழுத்துச் சீர்திருத்தம், பகுத்தறிவுக் கொள்கை

3. பெரியார் நடத்திய இதழ்கள் ....

அ) குடியரசு, நவசக்தி ஆ) நவசக்தி, விடுதலை

இ) நவசக்தி, உண்மை **ஈ) குடியரசு, விடுதலை**

சிறுவினாக்கள்

1. தந்தை பெரியாரைச் சிறப்பிக்கும் தொடர்களை எழுதுக

தந்தை பெரியாரைச் சிறப்பிக்கும் தொடர்கள்: வெண்தாடி வேந்தர், பகுத்தறிவுப் பகலவன், வைக்கம் வீரர், ஈரோட்டுச் சிங்கம், தெற்காசியாவின் சாக்ரஜசு, சுய மரியாதைச் சுடர், பெண்ணினப் போர் முரசு, புத்துலகத் தொலை நோக்காளர்.

2. 'மதம்' குறித்துப் பெரியாரது சிந்தனை யாது?

'மதங்கள் என்பன மனித சமூகத்தின் வாழ்க்கை நலத்திற்கே ஏற்படுத்தப்பட்டன. ஆனால், இன்று மதத்தின் நிலை என்ன? மதம் என்பது மனிதர்களை ஒற்றுமைப்படுத்தவா? பிரித்து வைப்பதற்கா?' எனப் பெரியார் பகுத்தறிவு வினாக்களை எழுப்பினார்; கடவுள் மறுப்புக் கொள்கையைக் கடைப்பிடித்தார்.

3. திருக்குறள் பற்றிப் பெரியார் கருத்தை எழுதுக

திருக்குறளில் அறிவியல் கருத்துகளும் தத்துவக் கருத்துகளும், அனைவருக்கும் பொதுவான வகையில் இடம் பெற்றிருப்பதால் அதை மதிப்புமிக்க நூலாகப் பெரியார் கருதினார். இந்நூலில் அரசியல், சமூகம், பொருளாதாரம் உள்ளிட்ட அனைத்தும் அடங்கியுள்ளன. இதை ஊன்றிப் படிப்பவர்கள் சுயமரியாதை உணர்ச்சி பெறுவார்கள் என்றார்.

4. தந்தை பெரியார் சாதி வேறுபாடு பற்றிக் கொண்டிருந்த கருத்துகளை எழுதுக

தந்தை பெரியார் வாழ்ந்த காலத்தில் சமூகத்தில் சாதி பிரிவுகள் மேலோங்கி இருந்தன. பிறப்பின் அடிப்படையில் உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்னும் வேறுபாடுகள் இருந்தன. சாதி என்னும் பெயரால் ஒருவரை ஒருவர் இழிவு செய்யும் கொடுமை இருந்தது. இந்த இழிநிலை கண்டு தந்தை பெரியார் கொதித்தெழுந்தார். 'சாதி உணர்வு ஆதிக்க உணர்வை வளர்க்கிறது; மற்றவர்களின் உரிமைகளைப் பறிக்கிறது; மனிதர்களை இழிவுபடுத்துகிறது. அந்தச் சாதி என்ற கட்டமைப்பைப் பறிக்கிறது; மனிதர்களை இழிவுபடுத்துகிறது. அந்தச் சாதி என்ற கட்டமைப்பை உடைத்தெறிய வேண்டும். சாதியினால் மனித வாழ்விற்கு எவ்விதச் சிறு பயனும் விளையப் போவதில்லை. அதனால் வீண் சண்டைகளும் குழப்பங்களுந்தான் மேலோங்குகின்றன" என்றார்.

5. மொழி, இலக்கியம் பற்றியப் பெரியார் கருத்ததுக்களை எழுதுக.

'ஒரு மொழியின் தேவை என்பது, அதன் பயன்பாட்டு முறையைக் கொண்டே அமைகிறது. இந்தியாவிலேயே பழமையான மொழி தமிழ் மொழியாகும். இன்றைய அறிவியல் வளர்ச்சிக்கேற்ற நூல்கள் தமிழில் படைக்கப்பட வேண்டும்' என்று பெரியார் கூறினார்.

'மொழியோ நூலோ இலக்கியமோ எதுவானலும் மனிதனுக்கு மானம், பகுத்தறிவு, வளர்ச்சி, நற்பண்பு ஆகிய தன்மைகளை உண்டாக்க வேண்டும்' என்று கருதி மொழி, இலக்கியம் ஆகியவற்றின் வளர்ச்சி குறித்தும் பெரியார் ஆழ்ந்து சிந்தித்தார்.

மதம், கடவுள் ஆகியவற்றின் தொடர்பற்ற இலக்கியம், யாவருக்கும் பொதுவான இயற்கை அறிவைத் தரும் இலக்கியம், யாவரும் மறுக்க முடியாத அறிவியல் பற்றிய இலக்கியம் ஆகியவற்றின் மூலம்தான் ஒரு மொழியும் அதன் இலக்கியங்களும் மேன்மை அடைய முடியும்: அத்துடன் அவற்றைப் பயன்படுத்தும் மக்களும் அறிவுடையவராக உயர்வார் என்று பெரியார் கூறினார்.

ஒளியின் அமைப்பு

1. சரியான விடையைத் தேர்வு செய்க

1. 'புதுக்கவிதையின் தந்தை' எனப் போற்றப்படுபவர் ....

அ) பாரதியார் **ஆ) பிச்சமூர்த்தி**

இ) வல்லிக்கண்ணன் ஈ) வேதநாயகம் பிள்ளை

2. 'பெருமரத்துடன் போட்டியிடுகிறது' என்று கவிஞர் குறிப்பிடும் மரம் எது?

அ) கமுகு ஆ) தென்னை

இ) பனை ஈ) மூங்கில்

3. பிறவி இருள், பெருமரம்: இச்சொற்களுக்குரிய இலக்கணக் குறிப்பு

அ) உருவகம், உவமைத்தொகை **ஆ) உருவகம், பண்புத்தொகை**

இ) உவமைத் தொகை, உருவகம் ஈ) உவமைத் தொகை, பண்புத் தொகை

சிறுவினாக்கள்

1. கமுகு மரம் எதைத் தேடியது ?

கமுகு மரம், தான் தோனிறிய இடத்தில் இருந்த பெருமரத்தின் நிழல் என்னும் இருளைத் துளைத்து நின்றது. பெருமரத்தின் நிழலை வெறுத்தது. உச்சிக்கிளைளைமேலே உயர்த்தியது.விண்ணிலிருந்து வரும் கதிரவன் ஒளியாகிய உயிர்ப்பைத் தேடியது.

2. வாழ்க்கைப் போரில் எது இன்பம்? எது மலர்ச்சி?

முண்டி மோதி மேலே செல்லும் துணிவே வாழ்க்கைப் போரில் இன்பம்: முயற்சியே வாழ்வின் மலர்ச்சி.

இலக்கணக் குறிப்பு

துளைத்து, வெறுத்து, உயர்த்தி, தேடி, இணங்கி,

வெளிந்து, நீட்டி, வளைத்து, நம்பி	-	இறந்தகால வினையெச்சங்கள்
பிறவி இருள், ஒளியமுது, வாழ்க்கைப் போர்	-	உருவகங்கள்
போகிறது, வளருகிறது	-	ஒன்றன்பால் வினைமுற்றுகள்

உறுப்பிலக்கணம்:

வெறுத்து : வெறு + த் + த் + உ

வெறு – பகுதி; த் – சந்தி; த் – இறந்த கால இடைநிலை;

உ – வினையெச்சவிகுதி

உயர்த்தி : உயர்த்து + இ

உயர்த்து – பகுதி; இ – வினையெச்ச விகுதி;

விகுதி இறந்தகாலம் காட்டியது.

தேடி : தேடு + இ

தேடு – பகுதி; இ – வினையெச்ச விகுதி

விகுதி இறந்தகாலம் காட்டியது.

வேண்டி : வேண்டு + இ

வேண்டு – பகுதி; இ – வினையெச்ச விகுதி.

விகுதி இறந்தகாலம் காட்டியது

போகிறது : போ + கிறு + அ + து

போ – பகுதி; கிறு – நிகழ் கால இடைநிலை;

அ – சாரியை; து – ஒன்றன்பால் வினைமுற்று விகுதி

வளருகிறது : வளர் + உ + கிறு + அ + து

வளர் – பகுதி; உ – சாரியை; கிறு – நிகழ்கால இடைநிலை

அ – சாரியை; து – ஒன்றன்பால் வினைமுற்று விகுதி

முயற்சி : முயல் + சி

முயல் – பகுதி; ல் – ற் ஆகியது விகாரம். சி – தொழிற்பெயர் விகுதி

மலர்ச்சி : மலர் + ச் + சி

மலர் – பகுதி; ச் – பெயர் இடைநிலை; சி – தொழிற்பெயர் விகுதி

தாவோ தே ஜிங்

1. சரியான விடையைத் தேர்வு செய்க

1. லா வோட்சு ………………… நாட்டுக் கவிஞர்?

அ) இந்தியா **ஆ) சீனா** இ) இங்கிலாந்து ஈ) கிரேக்கம்

2. வாயிலும் சன்னலும் ………………… என்பதால் பயன்படுகின்றன.

அ) கதவி ஆ) மரம் இ) வழி **ஈ) வெற்றுவெளி**

2. சிறுவினாக்கள்

1. சக்கரம் குறித்தும் அதன் பயனிடம் குறித்தும் லாவோட்சு என்ன கூறிகிறார்?

முப்பது ஆரக்கால்களும் சக்கரத்தின் மையத்தில் இணைகின்றன. ஆனால், சக்கரத்தின் பயன்பாடு அதன் காலிப் பகுதியால் கிடைக்கிறது என லா வோட்சு கூறினார்.

2. மண்பாண்டம் குறித்தும் அதன் பயன்பாட்டு இடம் குறித்தும் லா வோட்சு என்ன கூறுகிறார்?

களிமண்ணால் பாண்டம் உண்டாகிறது. பாண்டத்தின் பயன்பாடு பாண்டத்தினால் அமைவது இல்லை: பாண்டத்தில் உள்ள காலிப் பகுதியால் தான் அமைகிறது.

3. வாயிலும் சன்னலும் பயன்படுவது எதனால் என லா வோட்சு கூறிகிறார்?

வீட்டில் உள்ள வாயிலும் சன்னலும் கூட சுவரின் வெற்றிடமே. அதுவே நமக்குப் பயன்பாடு. சுவர்களுக்கு இடையே உள்ள வெற்றிடமே அறையாகப் பயன்படுகிறது.

4. ‘ஆரக்கால்’ எனத் தொடங்கும் கவிதை மூலம் கவிஞ் லா வோட்சு உணர்த்தும் கருத்தும் யாது?

பொருள்களைப் பயன்படுத்தும் போது பயன்பாடு இரண்டு விதங்களில் அமைகின்றது. ஒரு பக்கம், பொருளானது கண்ணால் காணப்படும் உருவாமாகப் பயன்படுகிறது. இன்னொரு பக்கம் பொருளில் அமைந்த உருவம் இல்லாத தன்மையால் பயன்படுகிறது எனக் கவிஞர் லா வோட்சு கூறுகிறார்.

இலக்கணக் குறிப்பு

இணைகின்றன, பயன்படுகின்றன - பலவின்பால் வினைமுற்றுகள்

கிடைக்கிறது	-	ஒன்றன்பால் வினைமுற்று
பாண்டம் பாண்டமாக	-	அடுக்குத் தொடர்
வெற்று வெளி	-	பண்புத் தொகை
வாயிலும் சன்னலும்	-	எண்ணும்மை
களிமண்	-	இருபெயரொட்டுப் பண்புத்தொகை

உறுப்பிலக்கணம்

இணைகின்றன : இணை + கின்று + அன் + அ

இணை – பகுதி; கின்று – நிகழ்கால இடைநிலை;

அன் – சாரியை; அ – பலவின்பால் வினைமுற்று விகுதி

கிடைக்கிறது : கிடை + க் + கிறு + அ + து

கிடை – பகுதி; க் – சந்தி; கிறு – நிகழ்கால இடைநிலை;

அ – சாரியை; து – ஒன்றன்பால் வினைமுற்று விகுதி

யசோதர காவியம்

1. யசோதர காவியம் ………………………. காப்பியங்களுள் ஒன்று

அ) அறநெறி **ஆ) ஐஞ்சிறு** இ) ஐம்பெரும் ஈ) நீதி

2. ஆக்க வேண்டுவது ……………………

அ) அறம் ஆ) பொருள் இ) இன்பம் ஈ) புகழ்

3. போக்க வேண்டுவது ………………. என யசோதர காவியம் கூறுகிறது

அ) காமம் ஆ) செல்வம் இ) மயக்கம் **ஈ) வெகுளி**

4. நோக்குவது ஏதெனில் ……………………. நோக்குக

அ) அறம் ஆ) வெகுளி **இ) ஞானம்** ஈ) விரதம்

5. நாம் காக்க வேண்டியது ………………………

அ) அரசு ஆ) படை இ) பணிவு **ஈ) விரதம்**

1. யசோதர காவியம் கூறும் நீதிகளைக் கூறுக.

நாம் ஒரு செயலைச் செய்வதென்றால் அச்செயல் பயன் தரத் தக்க அறச்செயலாக இருத்தல் வேண்டும்.: நம்மிடம் உள்ள தீய பண்புகளை நீக்கிட வேண்டுமாயின் முதலில் சினத்தை நீக்க வேண்டும்: ஆராய வேண்டுமெனால் மெய்யறிவு நூல்களை ஆராய வேண்டும்: இடைவிடாது போற்றிக் காக்க வேண்டுமானால் தாம் கொண்ட கொள்கையினைக் காக்க வேண்டும்.

<u>இலக்கணக் குறிப்பு</u>

ஆக்குக, போக்குக, நோக்குக, காக்க - வியங்கோள் வினைமுற்றுகள்

<u>உறுப்பிலக்கணம்:</u>

ஆக்குக : ஆக்கு + க

ஆக்கு – பகுதி; க – வியங்கோள் வினைமுற்று விகுதி

போக்குக : போக்கு + க

போக்கு – பகுதி; க – வியங்கோள் வினைமுற்று விகுதி

நோக்குக : நோக்கு + க

நோக்கு – பகுதி; க – வியங்கோள் வினைமுற்று விகுதி

காக்க : கா + க் + க

ஆக்கு – பகுதி; க் – சந்தி; க – வியங்கோள் வினைமுற்று விகுதி

யாப்பிலக்கணம்

1. அசையாவது யாது? அது எத்தனை வகை?

எழுத்துகளால் ஆனது ‘அசை’ எனப்படும். ஓரெழுத்தொ, இரண்டெழுத்தோ நிற்பது அசை எனப்படும். இது நேரசை, நிரையசை என இரு வகைப்படும்.

2. நேரசையாவது யாது? எடுத்துக்காட்டுத் தருக.

நேரசை	
தனிக்குறில்	ப
தனிக்குறில் ஒற்று	பல்
தனிநெடில்	பா
தனிநெடில்,ஒற்று	பால்

3. நிரையாவது யாது ?

நிரையசை	
இருகுறில்	அணி
இருகுறில் ஒற்று	அணில்
குறில், நெடில்	விழா
குறில், நெடில் ஒற்று	விழார்

4. சீர் ஆவது யாது? அது எத்தனை? அவையாவை?

ஒன்று அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட அசைகளின் சேர்க்கை சீர் ஆகும். இருவே பாடலில் ஓசைக்கு அடிப்படையாய் அமையும். ஓரசைச்சீர், ஈரிசைச்சீர், மூவிசைச்சீர், நாலசைச்சீர் எனச் சீர்கள் நான்கு வகைப்படும்.

5. நேர்பு, நிரைபு அசைகள் எனப்படுபவை யாவை?

நேர் என்பதோடு 'பு' என்னும் எழுத்து இணைந்து முடிவது உண்டு. அதனை நேர்பு என்னும் அசையாகக் கொள்வர். நிரை என்னும் அசையோடு 'பு' என்னும் எழுத்து இணைந்து முடியும் அசைகள் நிரைபு என்று கூறப்படும். இவை வெண்பாவின் இறுதியாய் மட்டுமே அசையாகக் கொள்ளப்படும்.

6. வெண்பாவின் ஈற்று அசைச் சீர்க்கு உரிய வாய்பாடுகள் யாவை?

அசை	வாய்பாடு
நேர்	நாள்
நிரை	மலர்
நேர்பு	காசு
நிரைபு	பிறப்பு

7. ஈரிசைச் சீர்க்கு உரிய வாய்பாடுகள் யாவை?

அசை	வாய்பாடு
நேர் நேர்	தேமா
நிரை நேர்	புளிமா
நேர் நிரை	கூவிளம்
நிரை நிரை	கருவிளம்

8. மூவசைச் சீர்க்கு உரிய வாய்பாடுகளைக் கூறுக.

காய்ச்சீர்	
அசை	வாய்பாடு
நேர் நேர் நேர்	தேமாங்காய்
நிரை நேர் நேர்	புளிமாங்காய்

நிரை நிரை நேர்	கருவிளங்காய்
நேர் நிரை நேர்	கூவிளங்காய்

கனிச்சீர்	
அசை	வாய்பாடு
நேர் நேர் நிரை	தேமாங்கனி
நிரை நேர் நிரை	புளிமாங்கனி
நிரை நிரை நிரை	கருவிளங்கனி
நேர் நிரை நிரை	கூவிளங்கனி

9. வெண்பாவில் வரும் சீர்கள் யாவை?

வெண்பாவில் இயற்சீரும் மட்டுமே வரும். பிற சீர்கள் வாரா.

10. அடியாவது யாது? அஃது எத்தனை வகை? அவை யாவை?

இரண்டும் இரண்டிற்கு மேற்பட்ட சீர்கள் தொடர்ந்து வருவது 'அடி' எனப்படும். அவை ஐந்து வகைப்படும்.

இரண்டு சீர்களைக் கொண்டது குறளடி: மூன்று சீர்களைக் கொண்டது சிந்தி: நான்கு சீர்களைக் கொண்டது அளவடி: ஐந்து சீர்களைக் கொண்டது அளவடி: ஆறு சீர்களைக் கொண்டது நெடிலடி: ஆறு சீர் அல்லது அதற்கு மேற்பட்ட சீர்களைக் கொண்டது கழிநெடிலடி.

11. தொடை எனப்படுவது யாது? அஃது எத்தனை வகை? அவை யாவை?

தொடை-தொட்டல். பாடலின் அடிகளிலோ, சீர்களிலோ எழுத்துகள் ஒன்றிவரத் தொடுப்பது 'தொடை' ஆகும். தொடை என்னும் செய்யுள் உறுப்பு, பாடலில் உள்ள அடிகள்தோறும் அல்லது சீர்கள்தோறும் ஒரு குறிப்பிட்ட வகையிலான ஓசை பொருத்தி வருமாறு அமைக்கிறது.

மோனை, எதுகை, இயைபு, அகபெடை, முரண், இரட்டை, அந்தாதி, செந்தொடை என்று எட்டு வகைகளாகத் தொடை அமைகிறது.

12. மோனைத் தொடையை விளக்குக.

மோனைத் தொடை: ஒரு பாடலில் அடிகளோ, சீர்களிலோ முதலெழுத்து ஒன்றி அமைவது.

(எ.கா) <u>ஒ</u>ற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்

<u>ஒ</u>ற்றினால் <u>ஒ</u>ற்றிக் கொளல்.

13. எதுகையாவது யாது? விளக்குக.

எதுகைத் தொடை: அடிகளிலோ, சீர்களிலோ முதல் முதல் எழுத்து அளவொத்து நிற்க இரண்டாம் எழுத்து ஒன்றி அமைவது.

(எ.கா) தி**று**னல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து

அ**று**னல்ல செய்யாமை நன்று.

14. இயையுத் தொடையை விளக்குக.

இயையுத் தொடை: அடிகள்தோறும் இறுதி எழுத்தோ, அசையோ, சீரோ, அடியோ ஒன்றியமைவது.

(எ.கா) வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு **கொஞ்சும்**

மந்திசிந்தி கனிகளுக்கு வான்கவிகள் **கெஞ்சும்**.

1. கீழ்க்கானும் திருக்குறளை அலகிட்டு அதன் வாய்பாடுகளை காண்க

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழா அரெனின்

வரிசை	சீர்	அசை	வாய்பாடு
1	கற்/றத/னா	நேர் நிரை நேர்	கூவிளங்காய்
2	லா/ய	நேர் நேர்	தேமா
3	பய/னென்/கொல்	நிரை நேர் நேர்	புளிமாங்காய்
4	வா/லறி/வன்	நேர் நிரை நேர்	கூவிளங்காய்
5	நற்/றாள்	நேர் நேர்	தேமா
6	தொழா/அ	நிரை நேர்	புளிமா
7	ரெனின்	நிரை	மலர்

2. பாடல்களில் பயின்வரும் தொடை நயங்களை எடுத்து எழுதுக

கொண்டல் கோபுரம் அண்டையில் கூடும்
கொடிகள் வானம் படிதர மூடும்
கண்ட பேரண்டம் தண்டலை நாடும்
கனக முன்றில் அனம் விளையாடும்
விண்ட பூமது வண்டலிட்டு ஓடும்
வெயில் வெய்யோன் பொன்னெயில் வழி தேடும்
அண்டர் நாயகர் செண்டலங் காரர்
அழகர் முக்கூடல் ஊர் எங்கள் ஊரே

மோனை

கொண்டல் – **கொ**டிகள், **க**ண் – **க**னக, **வி**ண்ட – **வெ**யில், **அ**ண்டர் – **அ**ழகர்

எதுகை

கொ**ண்**டல் – க**ண்**ட, வி**ண்**ட – அ**ண்**டர்

இயைபு

கூடும் – மூடும், நாடும் – ஆடும், ஓடும் – தேடும்

1. கீழ்க்காணும் பெயர்களை நேர் – நிரை அசைகளாகப் பிரித்துப் பார்க்க

வே/லா/யுதன் - நேர் நேர் நிரை

சாந்/தா - நேர் நேர்

கார்த்/திகே/யன் - நேர் நிரை நேர்

உஷா - நிரை

ஸ்ரீ/நிதி - நேர் நிரை

2. மூவகைச் சீரில் அமைந்த பெயர்கள் நான்கைக் குறிப்பிடுக

மீ/னாம்/பிகை ஆ/னந்/தி

யூ/சுப்/கான் மில்/லர்/ஜான்

3. *தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்*

தம்தம் வினையான் வரும்

இக்குறட்பாவில் பயின்றுவரும் மோனை, எதுகை ஆகியவற்றை கண்டறிக

மோனை : **த**ம்பொருள், **த**ம் தம்

எதுகை : த<u>ம்</u>பொருள், த<u>ம்</u> தம்

4. தளையின் வகைகளை எழுதுக

பாடலில், நின்ற சீரின் ஈற்றசையும், அதனையடுத்து வரும் சீரின்முதல் அசையும் பொருந்துதல் 'தளை' எனப்படும். இது ஒன்றியும் ஒன்றாமரும் வரும். அது ஏழு வகைப்படும்.

1. நேரொன்றாசிரியத்தனை - மா முன் நேர்
2. நிரையொன்றாசிரியத்தளை - விளம் முன் நிரை
3. இயற்சீர் வெண்டளை - மா முன் நிரை, விளம் முன் நேர்
4. வெண்சீர் வெண்டளை - காய் முன் நேர்
5. கலித்தளை - காய் முன் நிரை
6. ஒன்றிய வஞ்சித்தளை - கனி முன் நிரை
7. ஒன்றா வஞ்சித்தளை - கனி முன் நேர்

<u>1. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க</u>

கூற்று : பெரியார் உயிர் எழுத்துகளில் 'ஐ' என்பதனை 'அய்' எனவும் 'ஔ' என்பதனை 'அவ்' எனவும் சீரமைத்தார்.

காரணம் : சில எழுத்துகளைக் குறைப்பதன் வாயிலாகத் தமிழ் எழுத்துகளின் எண்ணிக்கையைக் குறைக்கலாம் என்று எண்ணினார்.

அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி

இ) கூற்று, காரணம் இரண்டும் தவறு ஈ) கூற்று தவறு, காரணம் சரி

2. காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்

ஞாலத்தின் மாணப் பெரிது – இக்குறளின் ஈற்றுச் சீரின் வாய்பாடு யாது?

அ) நாள் ஆ) மலர் இ) காசு **ஈ) பிறப்பு**

3. முண்டி மோதும் துணிவே இன்பம் – இவ்வடியில் இன்பமாக உருவகிக்கப்படுவது

அ) மகிழ்ச்சி ஆ) வியப்பு **இ) துணிவு** ஈ) மருட்சி

4. விடைக்கேற்ற வினாவைத் தேர்க

பானையின் பெற்றிடமே நமக்குப் பயன்படுகிறது.

அ) பானையின் எப்பகுதி நமக்குப் பயன்படுகிறது?

ஆ) பானை எப்படி நமக்குப் பயன்படுகிறது?

இ) பானை எதனால் நமக்குப் பயன்படுகிறது?

ஈ) பானை எங்கு நமக்குப் பயன்படுகிறது?

5. ஞானம் என்பதன் பொருள் யாது?

அ) தானம் ஆ) தெளிவு இ) சினம் **ஈ) அறிவு**

<u>சிறுவினாக்கள்</u>

1. பகுத்தறிவு என்றால் என்னா?

எச்செயலையும் அறிவியல் கண்ணோட்டத்துடன் அணுகி ஏன்? எதற்கு? எப்படி? என்ற விகாக்களை எழுப்பி, அறிவின் வழியே முடிவெடுப்பதே பகுத்தறிவாகும்.

2. தாவோ தேஜி 'இன்னொரு பக்கம்' என்று எதனைக் குறிக்கிறது?

பொருள்களைப் பயன்படுத்தும் போது பயன்பாடு இரண்டு விதங்களில் அமைகின்றது. ஒரு பக்கம், பொருளானது கண்ணால் காணப்படும் உருவமாகப் பயன்படுகிறது. இன்னொரு பக்கம் பொருனில் அமைந்த உருவம் இல்லாத தன்மை பயன்படுகிறது எனக் கவிஞர் லா வோட்சு கூறினார். முன்னோர்கள் செய்கார்கள் என்பதர்க்காகவே ஒரு செயலை அப்படியே பின்பற்றி நடக்கக்கூடாது.

3. கமுகு மரம் எதனைத் தேடியது?

கருகு மரம், தான் தோன்றிய இடத்தில் இருந்த பெருமரத்தின் நிழல் என்னும் இருளைத் துளைத்து நின்றது. பெருமரத்தின் நிழலை வெறுத்தது. உச்சிக்கிளையை மேலே உயர்த்தியது. விண்ணிலிருந்து வரும் கதிரவன் ஒளியாகிய உயிர்ப்பைத் தேடியது.

4. யசோதர காவியத்தின் பாட்டுத் தலைவன் யார்?

யசோதர காவியத்தின் பாட்டுத் தலைவன் யசோதரன் என்ற அவந்தி நாட்டு மன்னன்.

5. அசை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

எழுத்துகளால் ஆனது 'அசை' எனப்படும் ஓரெழுத்தோ, இரண்டெழுத்தோ நிற்பது அசை ஆகும். இது நேரசை, நிரையசை என இருவகைப்படும்.

6. சிக்கனம் குறித்து பெரியாரின் கருத்துக்களை இன்றைய நடைமுறையோடு தொடர்புபடுத்தி எழுதுக.

சிக்கம் என்னும் அருங்குணத்தைப் பெரியார் பெரிதும் வலியுறுத்தினார். அதற்கேற்பத் தாமும் வாழ்ந்து காட்டினார்: பொருளாதாரத் தன்னிறைவு அடையாத நிலையில் அனைவரும் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பது கட்டாயம் என்றார். விழாக்களும் சடங்குகளும் மூடப்பழக்கம் வளர்வதோடு, வீண்செலவும் ஏற்படுவதால் தேவையற்ற சடங்குகளையும் விழாக்களையும் தவிர்க்க வேண்டும் என்றார்.

இன்றைய நடைமுறையில் சிக்கனம் என்பது பலராலும் கடைப்பிடிக்கப்படவில்லை. கோவில் விழாக்களும் திருமண நிகழ்வுகளும் ஆடம்பரமே மேலோங்கி நிற்பதைப் பார்க்கிறோம்.

7. நாம் கடைபிடிக்க வேண்டிய வாழ்க்கை நெறிகளாக யசோதர காவியம் குறிப்பிடுவன யாவை?

நாம் ஒரு செயலைச் செய்வதென்றால் அச்செயல் பயன் தரத் தக்க அறச்செயலாக இருந்தல் வேண்டும். நம்மிடம் உள்ள தீய பண்புகளை நீக்கிட வேண்டுமெயின் முதலில் சினத்தை நீக்க வேண்டும் ஆராய வேண்டுமெனால் மெய்யறிவு நூல்களை ஆராய வேண்டும். இடைவிடாது போற்றிக் காக்க வேண்டுமெனால் தாம் கொண்ட கொள்ளையினைகட காக்க வேண்டும்.

8. பிறமொழி இலக்கியங்களைத் தழுவி எழுதப்பட்ட தமிழ் இலக்கியங்களைக் குறிப்பிடுக.

பிறமொழி இலக்கிய்களைத் தழுவி எழுதப்பட்ட தமிழ் இலக்கியம் சீலகசிந்தாமணி, பெருங்கதை, சூளாமணி, கம்பராமாயணம், வில்லிபாரதம், கந்தபுராணம்.

9. யாசோதர காவியம் வெளிப்படுத்தும் வாழ்க்கை நெறிகளைத் திருக்குறளுடன் ஒப்பிட்டு எழுதுக.

ஆக்குவது ஏது எனில் அறத்தை ஆக்குக : செய்ய வேண்டிய செயல் எது என்றால் அறமேயாகும் என்பது கருத்து. திருக்குறளில் அறன் வலிறுத்தும் என்னும் அதிகாரத்தை இது நினைவுப்படுத்துகிறது. ‘அறத்தின் ஊங்கு ஆக்கமும் இல்லை’ என்பது குறள். விடவேண்டியது வெகுளியையே என்கிறது யசோதர காவியம் ‘மறத்தல் வெகுளியை யார்மட்டும்’ என்று வெகுளாமை என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் குறிப்பிட்டுகிறார்.

ஆராய வேண்டுமெனால் அமய்யறிவு நூல்களை ஆராய வேண்டும் என்கிறது யசோதர காவியம். ‘கற்று ஈண்டு மெய்ப்பொருள“ கண்டார் தலைப்படுவர் மற்று ஈண்டு வாரா நெறி’. மெய்யுணர்தல் அதிகாரத்தில் உள்ள குறள் இது.

தான் கொண்ட கொள்கையை விடாமல் காக்க வேண்டும் என்கிறது யசோதர காவியம். கூற்றும் குதித்தலும் கைகூடும் நோற்றலின் ஆற்றல் தலைப்பட்டவர்க்கு என்பது குறள். கொள்கை விடாமல் காப்பதால் உண்டாகும் பயனை வள்ளுவர் உணர்த்துகிறார்.

சொற்றொடர்களை அடைப்புக் குறிக்குள் உள்ளவாறு மாற்றுக

1. மறுநாள் வீட்டுக்கு வருவதாக முரளி கூறினார்.

(நேர் கூற்றாக மாற்றுக)

விடை : “நான் நாளை வீட்டிற்கு வருவேன்” என்று முரளி கூறினார்.

2. “தென்னாட்டுப் பெர்னாட்ஷா என்று அறிஞர் அண்ணாவைப் புகழ்கிறோம்” என்று ஆசிரியர் கூறினார்.

(அயற் கூற்றாக மாற்றுக)

விடை: தென்னாட்டுப் பெர்னாட்ஷா என்று அறிஞர் அண்ணாவைத் தாங்கள் புகழ்வதாக ஆசிரியர் கூறினார்.

3. மார்னிங் நாஷ்டாவுக்கு இரண்டு தோசைகள் ஹோட்டலில் சாப்பிட்டான்.

(பிறமொழிச் சொற்களைத் தமிழாக்குக)

விடை: காலைச் சிற்றுண்டிக்கு இரண்டு தோசைகள் உணவு விடுதியில் சாப்பிட்டான்.

4. அலறும் மயிலும் கூவும் ஆந்தையும் சேவலும் போன்ற இயற்கையின் அழகான ஒலிகளை நாம் நேசிக்கவேண்டும்

(ஒலிமரபுப் பிழைகளைத் திருத்துக)

விடை: அகவும் மயிலும் அலறும் ஆந்தையும் கூவும் சேவலும் போன்ற இயற்கையின் அழகான ஒலிகளை நாம் நேசிக்க வேண்டும்.

5. கோழிக்குட்டிகளைப் பிடிக்கப் பூனைக்குஞ்சுகள் ஓடின

(பெயர் மரபுப் பிழைகளைத் திருத்துக)

விடை: கோழிக் குஞ்சுகளைப் பிடிக்கப் பூனைக் குட்டிகள் ஓடின.

நயம் பாராட்டல்

திங்கள்முடி சூடுமலை
தென்றல்விளை யாடுமலை
தங்குமுகில் சூழுமலை
தமிழ்முனிவன் வாழுமலை
அங்கயற்கண் அம்மைதிரு
அருள்சுரந்து பொழிவதெனப்
பொங்கருவி தூங்குமலை
பொதியமலை என்மலையே

- குமரகுருபரர்

முன்னுரை:

பதினேழாம் நூற்றாண்டில் தோன்றிய தமிழ்க் கவிஞர்கள் வரிசையில் முதலிடம் பெறுபவர் குமரகுருபரர். கந்தர்கலி வெண்பா, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், மதுரைக்கலம்பகம், நீதிநெறி விளக்கம், சகலகலாவல்லி மாலை, மீனாட்சி அம்மை குறம் என்னும் இவை முதலான நூல்களை அவர் அருளியுள்ளார்.

அவற்றுள் மீனாட்சி அம்மை குறம் என்னும் நூலில் உள்ள பாடல் இங்குத் தரப்பட்டுள்ளது. இதில் அமைந்த நயங்களை இக்கட்டுரையில் காண்போம்.

கருத்து:

பொதிய மலையானது சந்திரனை உச்சியில் சூடும் மலை; தென்றல் விளையாடும் மலை; மேகம் சூழும் மலை; தமிழ் முனிவர் அகத்தியர் வாழும் மலை; அங்கயற் கண்ணம்மையின் திருவருள் சுரந்து பொழிவது போல அருவி விழும் மலை. அது எனது மலை. (இவ்வாறு குறத்தி கூறுகிறாள்)

பொருள் நயம்:

பொதிய மலையின் உயரத்தை எப்படிச் சொல்வது? வானளாவிய மலை என்போம். சந்திரனை உச்சியில் சூடிய மலை எனக் கவிஞர் கூறுகிறார். சந்திர மண்டிலத்தளவுக்கு உயரமான மலை என உயர்வு நவிற்சி அணி அமையப்பாடுகிறார்.

பொதிமலைத் தென்றல் புலவர்களால் போற்றப்படுவது. மேகம் சூழ்ந்து விளங்கும் மலை அது. தமிழ் முனிவராகிய அகத்தியர் வாழும் இடம் பொதியமலை என்பது மரபு. அதனை இங்கே குறிக்கிறார். பேரருவி, ஐந்தருவி முதலான அருவிகளால் புகழ் பெற்றது பொதியமலை. குற்றாலம் எனக் கூறப்படும் இடம் இதுவே.

அருவி பொழிவது எதைப் போன்று விளங்குகிறது? அங்கயற்கண் அம்மையின் அருள் பொங்கி வழிவது போல் விழுகின்றதாம். பொதிகை அருவியில் நீராடுவது உடலுக்கு இன்பம். அன்னை அருளில் குளிப்பது உயிருக்கு இன்பம்.

மோனை நயம்:

திங்கள் – தென்றல், தங்கு – தமிழ், அங்கயற்கண் – அருள், பொங்கு – பொதியமலை என மோனை நயம் இப்பாடலில் அமைந்துள்ளது.

எதுகை நயம்:

திங்கள் – தங்கு – அங்கயற்கண் – பொங்கருவி என எதுகை நயம் சிறந்துள்ளது.

முடிவுரை:

இப்பாடல் இசையோடு பாடவும் அதற்கு ஏற்ப ஆடவும் பொருத்தமானது. இதைப் போன்ற இயற்கை வருணனைப் பாடல்களைப் படித்து மகிழ்வோம்.

பொருத்தமான வாய்பாடுகளை கோடிடுக

பகலவன்	-	காசு/**கருவிளம்**/கூவிளங்கனி
மலர்ச்சி	-	கூவிளம்/**புளிமா**/கருவிளம்
தாவோவியம்	-	**தேமாங்கனி**/தேமா/பிறப்பு
வெற்றிடம்	-	நாள்/**கூவிளம்**/புளிமா
பூங்குட்டி	-	கருவிளங்கனி/மலர்/**தேமாங்காய்**

பொருள் கூறுக

வயம்	–	வெற்றி;	ஓதம்	–	கடல்;
பொலிதல்	–	மிகுதல்;	துலக்கம்	–	தெளிவு;
நடலை	-	துன்பம்			

வினைத்தொகைகளைப் பொருத்தி எழுதுக

(வளர்தமிழ், விளைநிலம், குளிர்காற்று, விரிவானம், உயர்மதில், நீள்வீதி, கரைவிளக்கு, மூடுபனி, வளர்பிறை, தளிர்பூ)

1. **வளர்பிறை** நிலவுடன் **விரிவானம்** அழகாகக் காட்சியளிக்கிறது.
2. **தளிர்பூ**ங்கொடிகளும் **விளைநில**ங்களும் மனத்தைக் கொள்ளையடிக்கின்றன.
3. **நீள்வீதி**கள் அனைத்தும் **மூடுபனி**யில் முழுகிக்கிடக்கின்றன.
4. மெல்ல வீசும் **குளிர் காற்**றும் **வளர் தமிழ்** புகழ்பாடுகின்றது.
5. தொலைவில் கலங்**கரை விளக்க**த்தின் ஒளி **உயர்மதில்** சுவரை ஒளிரச் செய்கிறது.

பொருத்துக

				விடை
1. நேர் நேர் நிரை	-	கருவிளங்காய்	-	தேமாங்கனி
2. நிரை நிரை நேர்	-	கூவிளம்	-	கருவிளங்காய்
3. நேர நிரை	-	தேமாங்காய்	-	கூவிளம்
4. நிரை நிரை	-	தேமாங்கனி	-	கருவிளம்
5. நேர் நேர் நேர்	-	கருவிளம்	-	தேமாங்காய்

3. விரிவாகும் ஆளுமை

1. சரியான விடையைத் தேர்வு செய்க

1. 'யாவரும் கேளிர்'. கேளிர் என்னும் சொல்லின் பொருள் .... என்பது

அ) உறவினர் ஆ) கேளுங்கள் இ) பகைவர் ஈ) மலைவாழ் பழங்குடியினர்

2. 'நான் மனிதன்; மனிதனைச் சார்ந்த எதுவும் எனக்குப் புறமன்று' – இதனைக் கூறியவர் ....

அ) கோர்டன் ஆல்போர்ட் ஆ) கோர்டன் **இ) தெறென்ஸ்** ஈ) மார்க்ஸ்

3. 'திருக்குறளில் உள்ளவை போன்ற செய்யுள்களை உலக இலக்கியத்தில் காண்பது அரிது' எனக் கூறியவர் ....

அ) ஆல்பர்ட் சுவைட்சர் ஆ) கோர்டன் இ) வீரமாமுனிவர் ஈ) ஜி.யு.போப்

4. நன்மையை நன்மைக்காகவே செய்த வள்ளல் ....

அ) அதியமான் **ஆ) ஆய்** இ) ஓரி ஈ) நள்ளி

5. 'நம்நாடு எல்லா மக்களுக்கும் தாய்நாடு' எனக் கருதுதல் வேண்டும் எனக் கூறியவர்

அ) கோர்டன் ஆல்போர்ட் **ஆ) செனக்கா** இ) தெறென்ஸ் ஈ) மார்க்ஸ்

6. ஜி.யு.போப் திருவள்ளுவரை .... எனப் போற்றினார்.

அ) அறச்சான்றோர் **ஆ) உலகப் புலவர்**

இ) தெய்வக் கவிஞர் ஈ) பெரும்புலவர்

2. சிறுவினாக்கள்

1. அக்காலத்திலேயே ஒரு நாட்டவர் பிற நாட்டவரோடு உறவு பாராட்ட விரும்பியுள்ளனர் என்பதைத் தனிநாயக அடிகள் எங்ஙனம் விளக்கியுள்ளார்?

கணியின் பூங்குன்றனரின் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்னும் கொள்கை எல்லா நூற்றாண்டுகளுக்கும் பொருத்தமாக உள்ளது.

யாதானும் நாடாமல் ஊராமல் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு

என்னும் திருக்குறள் முன்பு எப்போதையும் விட நம் காலத்திற்குப் பொருத்தமான அறிவுறையாக விளங்குகின்றன. ஒரு நாட்டவர் பிற நாட்டவர் பிற நாட்டவரோடு உறவு பாராட்ட அக்காலத்திலேயே விரும்பியுள்ளனர். இந்த இரண்டு சான்றுகள் மூலம் தனிநாயக அடிகள் விளக்கியுள்ளார்.

2. இலத்தீன் புலவர் தெறென்ஸ் கூற்று யாது?

'நான் மனிதன்: மனிதனை சார்ந்த எதுவும் எனக்குப் புறமன்று' என்பதே இலத்தீன் புலவர் தெறென்ஸ் கூற்று.

3. ஆய் என்ற வள்ளலுக்கு அமைந்த பெருமை யாது?

கடையெழு வள்ளல்களுல் ஒருவராக ஆய் என்பவரைப் போற்றுவதற்குக் காரணம் அவர் நன்னையை நன்மைக்காகவே செய்ததுதான். பிறர் போற்றுவர்கள் என்றோ வேறு நலன்களைப் பெறலாம் என்றோ அவர் நன்மையைகளைச் செய்யவில்லை.

இம்மைச் செய்தன் மறுமைக்கு ஆமெனும்
அறவிலை வணிகன் ஆய் அலன்

எனப் புறநானூறு, ஆய் என்ற வள்ளலுக்கு அமைந்த அபருமைக் கூறுகிறது.

4. தமிழ் இலக்கியயம் காட்டும் பண்பாட்டுச்சிறப்பை எழுதுக.

பிறர்க்காக வாழும் மக்கள் இவ்வுலகில் இல்லையென்றால், நம் வாழ்வது அரிது. பிறர்க்காக வாழ்வதே உயர்ந்த பண்பும் பண்பாடும் ஆகும். "உண்டாலம்ம இவ்வுலகம்" என்ற புறப்பாட்டு இந்தப் பண்பைப் அழபாப எடுத்துக் காட்டுகிறது.

பண்புடைமை என்னும் அதிகாரத்திற்கு உரை கண்ட பரிப்பொருள் பின்வறுமாறு கூறியுள்ளார்: "பண்புடைமையாவது யாவர்மாட்டும் அன்பினராய்க் கலந்து ஒழுகுதலும், அவரவர் வருத்தத்திற்குப் பரிதலும் பகுத்து உண்டலும் பழிநாணலும் முதலான நற்குணங்கள் பலவும் உடைமை"

5. விரிவாகும் ஆளுமையை அடைய வள்ளுவர் கூறும் அறிவுரைகள் யாவை?

விரிவாகும் ஆளுமையை அடைய 'உள்ளற்க உள்ளம் சிறுகுவ ', ' உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல்' என்னும் இரண்டு அறிவுரைகளை வள்ளுவர் கூறியுள்ளார்.

6. பிறர் மீதான அன்பு பாராட்டலைப் பரப்பியதில் பாவர், புலவர் பங்கு குறித்து எழுதுக?

தமிழ் இலக்கியத்தை ஆராயும்போது, பிறர் நலக்கொள்கையையும் பிறர் மீதான அன்பு பாராட்டலையும் முதன்முதலில் பரப்புவதற்குக் காரஅமாய் இருந்தவர்கள் தமிழ்நாட்டுப் பாணரும் புலவருமே ஆவர். பாணர்க்கும் சொந்த ஊரும் நாடும் உண்டு. ஆயினும் அவர்கள் தமிழ் வழங்கும் அடமெ்கும் சென்று அரசர்களையும் வள்ளல்களையும் மக்களையும் வாழ்த்தி வந்ததால் 'தமிழகம்' என்ற ஒற்றுமை உணர்வு உண்டானது. அம்மொழிபரவிய நிலம் அனைத்தையும் 'தமிழகம்' என்றும் 'தமிழ்நாடு' என்றும் வழ்த்தினர்.

பிறநாடுகளைக் குறிப்பிடும்போது வேற்று நாடு, பிறநாடு என்று குறிக்காது மொழிமாறும் நாடு-மொழிபெயர் தேசம்-என்றே வரையறுத்துக் கூறியுள்ளனர்.

7. அகத்திணை இலக்கியம் காட்டும் பரந்த மனப்பான்மையை விளக்குக.

அகத்திணை இலக்கியம் பல்வேறு வழிகளில் பரந்த மனப்பான்மையையும் விரிவான ஆளுமையும் வளர்த்தது. ஐவகை நிலங்களின் பெரும்பொழுது, சிறுபொழுது,கருப்பொருள் ஆகியவற்றைப் புலவரும் பாணரும் இலக்கியம் பயில்வோரும் தவறாது கற்று வந்தனர். தொல்காப்பியர் நிலத்தைப் பிரித்தமுறை உலகின் பிரிவாகவே அமைந்தது.

களவொழுக்கத்திலும் ற்றெபொழுக்கத்திலும் பிற உயிரொன்றைக் காதலிப்பதாலும் குழந்தைகளைப் பேணுவதாலும் பரந்த மனப்பான்மை ஆளுமையும் விரிவடைய வாய்ப்பிருந்தது. புலவர்கள் தம் செய்யுல்களில் தலைவன், தலைவி, தோழி, செவிலித்தாய் ஆகியோரைக் கற்பனை செய்து பாடுவதால் பிறர் பற்றி அறியும் பண்பை எளிதாக உணர்த்த முடிந்தது.

8. கங்கையும் இமயமும் புறநானூற்றில் இடம் பெற்றுள்ள தன்மையை விளக்குக.

வட இந்தியாவுடன் தொடர்புகள் வளர வளரக் கங்கையும் இமயமும் அடிக்கடி தொகைநூல்களில் எடுத்தாளப்பட்டன. இமயமலை, நிலைத்த உறுதிக்கு மேற்கோளாகக் காட்டப்படுகின்றன.

இமயத்துக்

கேடு உயர்ந்தன்ன தம் இசை நட்டுத்
தீது இல் யாக்கையொடு மாய்தல்
தவத்தலையே (புறம் 214)

புலவர்கள் குமரி ஆறு, காவிரி ஆறு போன்ற மணல் நிறைந்த இடங்களை நீண்ட வாழ்க்கைக்கும் பன்மைக்கும் உவமையாகக் கூறுகிறார்கள். அத்துடன் கங்கையையும் இமயத்தில் பெய்யும் மழையையும் உவமையாகச் சேர்த்துக் கொள்கிறார்கள்.

"இமயத்து ஈண்டி இன்குரல் பயிற்றிக்
கொண்டல் மாமழை பொழிந்த
நுண்பல் குளியினும் வாழியே பலவே" (புறம் 24)

சில புலவர்கள் இமயத்தையும் கங்கையையும் தமிழ்நாட்டு மலைகளுடனும் ஆறுகளுடனும் சேர்த்தே பாடுகின்றனர்.

அக்கறை

1. சரியான விடையைத் தேர்வு செய்க

1. சைக்கிளில் வந்த கூடையில் இருந்த பொருள் ....

அ) ஆப்பிள் ஆ) கத்திரிக்காய் **இ) தக்காளி** ஈ) மாங்காய்

2. பழங்களைவிடவும் நசுங்கிப் போனது ....

அ) சைக்கிள் ஆ) பழம் கொடுவந்தவர் மனம்
இ) தெருவில் இருந்த நாய்க்குட்டி **ஈ) அடுத்த மனிதர்கள் மீதான அக்கறை**

சிறுவினாக்கள்

1. மனித நேயம் குறைந்து வருவதைக் கல்யாண்ஜி எங்ஙனம் காட்டுகிறார்?

தெருவில் ஒருவர் சைக்கிளில் வந்து கொண்டிருந்தார். சைக்கிளில் ஒரு கூடை இருந்தது. கூடை நிறையதட தக்காளிப் பழங்கள். திடீரென்று கூடை சரிந்தது தக்காளிப் பழங்கள் தரையில் உருண்டன: நசுங்கின. மக்கள் பலரும் அந்த இடத்தைக் கடந்து நடந்து சென்றனர்.யாரும் அதனைக் கண்டு கொள்ளவில்லை. அவரவர்க்குத் தலைக்கு மேலே வேலை. பழங்களை விடவும் நசுங்கிப் போனது அடுத்த மனிதர்கள் மீதான அக்கறை என மனிதநேயம் குறைந்து வருவதைக் கல்யாண்ஜி காட்டுகிறார்.

இலக்கணக் குறிப்பு

வந்த	-	இறந்தகாலப் பெயரெச்சம்
சரிந்து	-	இறந்தகால வினையெச்சம்
அனைவரும்	-	முற்றும்மை
உருண்டது, போனது	-	ஒன்றன்பால் வினைமுற்றுகள்

உறுப்பிலக்கணம்

வந்தி : வா (வ) + த் (ந்) + த் + அ
வா – பகுதி; 'வ' எனக் குறுகியது விகாரம்;
த் – சந்தி; த் – ந் ஆனது விகாரம்; த் – இறந்தகால இடைநிலை;
அ – பெயரெச்ச விகுதி

சரிந்து : சரி + த் (ந்) + த் + உ
சரி – பகுதி; த் – ந் ஆனது விகாரம்;
த் – இறந்தகால இடைநிலை; உ – வினையெச்ச விகுதி

உருண்டது : உருள் (ண்) + ட் + அ + து
உருள் – பகுதி; ள் – ண் ஆனது விகாரம்; ட் – இறந்தகால இடைநிலை;
அ – சாரியை; து – ஒன்றன்பால் வினைமுற்று விகுதி

போனது : போ + இ(ன்) + அ + து
போ – பகுதி; இன் – இறந்தகால இடைநிலை; 'இ' – கெட்டது
அ – சாரியை; து – ஒன்றன்பால் வினைமுற்று விகுதி

குறுந்தொகை

1. சரியான விடையைத் தேர்வு செய்க

1. குறுந்தொகை .... நூல் தொகுதியைச் சேர்ந்தது.
   அ) எட்டுத்தொகை ஆ) காப்பியம் இ) பத்துப்பாட்டு ஈ) பதினெண் கீழ்க்கணக்கு
2. குறுந்தொகையில் கடவுள் வாழ்த்து நீங்கலாக உள்ள பாடல்களின் எண்ணிக்கை
   அ) 399 ஆ) 400 **இ) 401** ஈ) 402

சிறுவினாக்கள்

1. தலைவன் விரைவில் வந்து தலைவியைக் காண்பான் என்பதைத் தோழி எவ்வாறு உணத்தினாள்?

தோழி தலைவியிடம், "தலைவன் உன்னிடம் மிகுந்த விருப்பம் உடையவன். அவன் பொருள் சம்பாதிப்பதற்காக உன்னைப் பிரிந்து சென்றுள்ளான். விரைவில் வந்து உன்னைக் காண்பான். ஏனென்றால் அவன் பிரிந்து சென்ற வழியில், பெண் யானையின் பசியைப் போக்கப், பெரிய கைகளை உடைய ஆண் யானை, மெல்லிய கிளைகளை உடைய 'யா' மரத்தின் பட்டைய உரித்துத் தன் அன்பை வெளிப்படுத்தும். அந்தக் காட்சியைத் தலைவனும் காண்பான்: அக்காட்சி அவனுக்கு உன்னை நினைவுபடுத்தும். எனவே அவன் விரைந்து உன்னை நாடி வருவான். வருந்தாது பொருத்திருப்பாய் என்று கூறினாள்.

இலக்கணக் குறிப்பு

உடையர்	-	குறிப்பு வினைமுற்று
நல்கலும் நல்குவர்	-	எச்ச உம்மை
பிடிபசி	-	ஆறாம் வேற்றுமைத் தொகை
களை இய	-	சொல்லிசை அளபெடை
பெருங்கை, மென்சினை	-	பண்புத் தொகைகள்
பொளிக்கும்	-	செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று
அன்பின்	-	பலவின்பால் வினைமுற்று
சென்ற	-	இறந்தகாலப் பெயரெச்சம்

உறுப்பிலக்கணம்

உடையர் : உடை + ய் + ஆர்
உடை – பகுதி; ய் – உடம்படுமெய் சந்தி;

		அர் – பலர்பால் விகுதி
நல்குவர்	:	நல்கு + வ் + அர்
		நல்கு – பகுதி; வ் – எதிர் கால இடைநிலை;
		அர் - பலர்பால் வினைமுற்று விகுதி
பொளிக்கும்	:	பொளி + க் + கு + உம்
		பொளி – பகுதி; க் – சந்தி; கு – சாரியை; உம் – செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று விகுதி. விகுதி எதிர்காலம் காட்டியது. (காலம் காட்டும் விகுதி இச்சொல்லில் அமைந்திருப்பதால் தனியே இடைநிலை தேவையில்லை. 'கு' என்று சாரியை அமைக்கப்பட்டது)

அணியிலக்கணம்

1. உவமை அணியை விளக்குக.

ஒரு பொருருக்கு மற்றொரு பொருளை ஒப்பிட்டுக் கூறுவது உவமை ஆகும். ஒரு செய்யுளில் உவமை ஒரு தொடராகவும் பொருள் (உவமேயம்) ஒரு தொடராகவும் அமைய அவற்றை இணைக்கும் சொல்லாகிய உவம உருபு வெளிப்படையாம் அமைந்திருப்பது உவமை அணியின் இலக்கணமாகும்.

(எ.கா) **இனிய உளவாக இன்னாத கூறல்**
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று

விளக்கம் : அனிய உளவாக இன்னாத கூறல் – உவமேயம்
கனிஇருப்பக்காய்கவர்தல் – உவமை
அற்று – உவம உருபு

2. உருவக அணியாவது யாது? விளக்குக.

உவமையின் தன்மையைப் பொருள்மேல் ஏற்றிக்கூறுவது 'உவுவகம்' எனக் கூறப்படும். உவமை, உவமேயம் என்னும் ஒன்றே என்று தோன்றும்படி கூறுவது உருவக அணி ஆகும்.

(எ.கா) *இன்சொல் விளைநிலமா ஈதேல வித்தாக*
வன்சொற் களைகட்டு வாய்மை எருவட்டி
அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈன்றதோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய்.

இப்பாடலில், இன்சொல் – நிலமாகவும், வன்சொல் – களையாகவும், வாய்மை – எருவாகவும், அன்பு – நீராகவும், அறம் – கதிராகவும் உருவாகப் படுத்தப்பட்டுள்ளன.

3. சொல் பின்வருநிலை அணியை விளக்குக.

முன் வந்த சொல்லே பின்னும் பலவிடத்தும் வந்து வேறு பொருள் உணர்த்துவது சொல் பின்வருநிலை அணியாகும்.

(எ.கா) *துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்*
துப்பாய தூஉம் மழை.

இக்குறளில் 'துப்பு' என்ற சொல் மீண்டும் மீண்டும் வந்து வேறு பொருள்களளைத் தருகிறது.

துப்பார்க்கு – உண்பவர்க்கு: துப்பு – நல்ல, நன்மை: துப்பு – உணவு என்று பல் பொருள்களில் வருவதைக் காணலாம்.

4. பொருள் பின்வருநிலை அணி என்றால் என்ன? விளக்குக.

பொருள் பின்வருநிலையணி : நெய்யுளில் முன் வந்த பொருளே பின்னர்ப் பல இடங்களிலும் வருவது பொருள் வருநிலையணி ஆகும்.

(எ.கா) *அவிழ்ந்த தோன்றி யலர்ந்தன காயா*
நெகிழ்ந்தன நேர்முகை முல்லை – மகிழ்ந்திதழ்
விண்டன கொன்றை விரிந்த கருவிளை
கொண்டன காந்தள் குலை.

இச்செய்யுளில் அவிழ்ந்தன, அலர்ந்தன, நெகிழ்ந்தன, விண்டன, விரிந்தன, கொண்டன ஆகிய சொற்கள் மலர்ந்தன என்ற ஒரு பொருளையே தந்தது.

5. சொற்பொருள் பின்வருநிலை அணி விளக்குக.

முன்னர் வந்த சொல்லும் பொருளும் பின்னர்ப் பல இடங்களிலும் வருவது சொற்பொருள் பின்வருநிலையணி ஆகும்.

(எ.கா) **எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்**
பொய்யா விளக்கே விளக்கு.

இக்குறட்பாவில் 'விளக்கு' என்னும் சொல் ஒரே பொருளில் பலமுறை வந்துள்ளதால் இது சொற்பொருள் பின்வருநிலையணி ஆகும்.

6. **கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு**
மாடல்ல மற்றை யவை – இக்குறளில் பயிலும் அணியை விளக்குக.

இக்குறளில் பொருள் பின்வருநிலை அணி வந்துள்ளது.

அணி இலக்கணம் : செய்யுளில் முன்வந்த பொருளே பின்னர்ப் பல இடற்களிலும் வருவது. பொருள் பின் வருநிலையணி ஆகும்.

விளக்கம் : இக்குறட்பாவில் செல்வம், மாடு ஆகிய இரு சொற்களுமே செல்வத்தையே குறிக்கின்றன.

7. வஞ்சிப்புகழ்ச்சி என்பது யாது ? விளக்குக.

வஞ்சிப் புகழ்ச்சியணி என்பது புகழ்வது போலவே பழிப்பது, பழிப்பது போலவேப் புகழ்வதும் ஆகும்.

(எ.கா) **தேவ ரனையர் கயவர் அவருந்தாம்**
மேவனை செய்தொழுக லான்.

கயவர்கள் தேவர்கருக்கு ஒப்பானவர்கள் என்று புகழப்படுவது போலத் தோன்றினாலும், கயவர்கள் இழிந்த செயல்களை செய்வர் என்னும் பொருளைக் குறிப்பால் உணர்த்துகிறது. எனவே, இது புகழ்வது போலப் பழிப்பது ஆகும்.

பாரி பாரி என்று பல ஏத்தி,
ஒருவற் புகழ்வர், செந்நாப் புலவர்
பாரி ஒருவனும் அல்லன்:
மாரியும் உண்டு, ஈண்டு உலகுபுரப் பதுவே.

இப்பாடலின் பொருள் : புலவர் பவலரும் பாரி ஒருவனையே புகழ்கின்றனர். பாரி ஒருவன் மட்டுமா கைம்மாறு கருதாமல் கொடுக்கின்றான்? மழையும்தான் கைம்மாறு கருதாமல் கொடுத்து இவ்வுலகத்ததைத் காக்கிறது.

இது பாரியை இகழ்வது போரத் தோன்றினாலும், பாரிக்கு நிகராகக் கொடுப்பவரில்லை என்று புகழ்கிறது.

8. கீழ்க்காணும் குறப்பாக்கில் அந்த அணி வகையைக் கண்டறிக

அ) *ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு*
ஆழி எனப்படு வார்.

இக்குறளில் அமைந்துள்ள அணி ஏகதேச உருவகம். இரண்டு பொருள்களை எடுத்துக் கொண்டு அவற்றுள் ஒன்றை உருவகம் எசய்து மற்றொன்றை உருவகம் செய்யாமல் விடுவது இந்த அணியின் இலக்கணம்.

சான்றாண்மைப் பண்பினைக் கரை என உருவகித்த ஆசிரியர் சான்றோரைக் கடல் என உருவகம் செய்யாமல் விட்டதால் இது **ஏகதேச உருவக அணி** ஆகும்.

ஆ) *பிறர்நாணத் தக்கது தான்நாணான் ஆயின்*
அறம்நாணத் தக்கது உடைத்து

இதில் **ஆட்படை நிலை அணி** அமைந்துள்ளது என்பார் பாவாணர்.

இ) *தீயவை தீய பயத்தலால் தீயவை*
தீயினும் அஞ்சப் படும்

இதில் அமைந்துள்ள அணி **சொற்பொருள் பின்வருநிலை** அணி.

9. உவமை அணி அமைந்த பாடல் அடிகளை எழுதுக

அரம்போலும் கூரிமைய சேனும் மரம்போல்வர்
மக்கட்பண்பு இல்லா தவர்.

10. கீழ்க்காணும் புதுக்கவிதையில் அமைந்த அணியினை எழுதுக.

விருட்சங்கள்
மண்ணரசி மடக்காமலேயே
பிடித்துக் கொண்டிருக்கும்
பச்சைக் குடைகள்.

மண்ணை அரசியாகவும் மரங்களைக் குடையாகவும் உருவகம் செய்திருப்பதால் இதில் அமைந்த அணி **உருவக அணி.**

1. சரியான விடையைத் தேர்வு செய்க

1. இமயத்துக் கோடு உயர்ந்தன்ன – இவ்வடிவில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் யாது?

அ) கொம்பு **ஆ) மலையுச்சி** இ) சங்கு ஈ) மேடு

2. தமிழ்ப் புலவரைப போலவே உரோமச் சிந்தனையாளர் கொண்ட கொள்கை

அ) நிலையற்ற வாழ்க்கை ஆ) பிறருக்காக வாழ்தல்ஹ

இ) இம்மை மறுமை **ஈ) ஒன்றே உலகம்**

3. வண்ணதாசனுக்குக் சாகித்திய அகாதெமி பரிசு பெற்றுத் தந்த நூல்

அ) ஒரு சிறு இசை ஆ) முன்பின் இ) அந்நியமற்ற நதி ஈ) உயரப் பறத்தல்

4. யா மரம் என்பது எந்த நிலத்தில் வளரும்?

அ) குறிஞ்சி ஆ) மருதம் **இ) பாலை** ஈ) நெய்தல்

5. கேடில்விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை – இக்குறளில் பயின்று வந்துள்ள அணி?

அ) சொல் பின்வருனிலையணி **ஆ) பொருள் பின்வருநிலையணி**

இ) சொற்பொருள் பின்வருநிலையணி ஈ) வஞ்சப் புகழ்ச்சியணி

சிறுவினாக்கள்

1. தமிழ்ச் சான்றோர்க்கும் உரோமையச் சான்றோர்க்கும் உள்ள வேறுபாடு யாது?

தமிழ் மக்கள் 'சான்றோன்' எனப்படும் குறிக்கோள் மாந்தனைப் பாராட்டினர். உரோமையருடைய 'சாப்பியன்ஸ்' அல்லது சான்றோர் என்பவன் சமுதாயத்திலிருந்துவிலகித் தான் பண்புகளையே வளர்ப்பவனாக இருந்தான். உரோமையருடைய சான்ரோர் அரிதாகவே சமுதாயத்தில் தோன்றுவர்.

2. பிடி பசி களைஇய பெருங்கை வேழம் – இவ்வடியில் உள்ள இலக்கணம் குறிப்புகளைக் கண்டறிக.

பிடி பசி	-	ஆறாம் வேற்றுமைத் தொகை
களை இய	-	சொல்லிசை அளபெடை
பெருங்கை	-	பண்புத் தொகை
பெருங்கை வேழம்	-	இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை

3. குறுந்தொகை – பெயர்க்காரணம் எழுதுக.

குறுந்தொகை என்பது குறைந்த அடிகளை உடைய செய்யுள்களால் தொகுக்கப்பட்ட நூலாகும். பாடல்கள் குறைந்த அளவாக நான்கு அடிகளையும் அதிக அளவாக எட்டு அடிகளையும் கொண்டவை. இவற்றைக்காட்டிலும் கூடிய அளவில் பாடல்கள் அமைந்த நூல்களிலிருந்து வேறுபாடு தெரியும் பொருட்டு இந்நூல் குறுந்தொகை எனப்பெயர் பெற்றது.

4. நினைத்தேன் கவித்தேன் படைத்தேன் சுவைத்தேன் – அத்தொடரில் அமைந்துள்ள உருவகத்தைக் கண்டறிக.

இத்தொடரில் அமைந்துள்ள உருவகம் 'கவித்தேன்' என்பது . கவிதை, தேனாக உருவாகம் செய்யப்பட்டுள்ளது.

5. உலக இலக்கியத்தில் காண இயலாத அரிய கருத்துகளாக ஆல்பர்ட் சுவைட்சர் குறிப்பிடுவன யாவை?

ஒழுக்க இயலை நன்கறிந்து எழுதிய உலகமேதை ஆல்பர்ட் சுவைட்சர், திருக்குறளைப் பற்றிக் கூறும் போது, "இத்தகைய உயர்ந்த கொள்கைகளைக் கொண்ட செய்யுள்களை உலக இலக்கியத்தில் காண்பது அரிது" என்று குறிப்பிடுகிறார்.

6. கோர்டன் ஆல்போர்ட் கூறும் மூன்று இலக்கணங்களைக் குறிப்பிடுக?

முதிர்ந்த ஆளுமைக்குத் தேவையான மூன்று இலக்கணங்கள் என கோர்டன் ஆல்போர்ட் என்ற உளநூல் வள்ளுநர் கூறுவன.

முதலாவதாக மனிதன், தன் ஈடுபாடுகளை விரிவாக வளர்ப்பவனாக இருத்தல் வேண்டும். பிறருடைய நலத்திற்கும் இன்பத்திற்கும் பாடுபடக்கூடிய வகையில் தன் ஆளுமையை விரிவடையச் செய்து

செழுமைப்படுத்த வேண்டும். இரண்டாவதாக, ஒருவன் பிறரால் எவ்வாறு கணிக்கப்படுகிறானோ அதை அறிந்து கொள்ளும் ஆற்றல்படைத்தவனாக இருத்தல் வேண்டும். மூன்றாவதாக அவனது வாழ்க்கைக்குத் தன் ஓர்மையைத் தரும் வாழ்க்கைத் தத்துவத்தைக் கடைபிடித்து நடத்தல் வேண்டும்.

7. பழங்களை விடவும் நசுங்கிப் போனது – இடம் சுட்டிப் பொருள் விளக்குக தருக.

இடம் : இத்தொடர், கல்யாண்ஜி என்னும் கவிஞர் எழுதிய அக்கறை என்ற புதுக்கவிதையில் இடம் பெற்றுள்ளது.

விளக்கம் : தெருவில் ஒருவர் சைக்கிளில் வந்து கொண்டிருந்தார். சைக்கிளில் ஒரு கூடை இருந்தது. கூடை நிறையதட தக்காளிப் பழங்கள். திடீரென்று கூடை சரிந்தது தக்காளிப் பழங்கள் தரையில் உருண்டன: நசுங்கின. மக்கள் பலரும் அந்த இடத்தைக் கடந்து நடந்து சென்றனர்.யாரும் அதனைக் கண்டு கொள்ளவில்லை. அவரவர்க்குத் தலைக்கு மேலே வேலை. பழங்களை விடவும் நசுங்கிப் போனது அடுத்த மனிதர்கள் மீதான அக்கறை என மனிதநேயம் குறைந்து வருவதைக் கல்யாண்ஜி காட்டுகிறார்.

8. மணல் விளையாட்டு என்னும் தலைப்பில் சிறு கவிதை படைக்க.

<u>மணல் விளையாட்டு</u>

இப்பொது
ஒன்பதாம் வகுப்புப் படிக்கிறேன்.
ஐந்துவயதில்
மணலில் விளையாடிய
பொறியாளர்கள் நாங்கள்.
ஆயிரம் கோபுரம்
ஆனந்தமாய்க் கட்டினோம்.
அவற்றில் சுரங்கம்
அழகாய் அமைத்தோம்.
அவற்றை உடைக்கும் போதும் ஆனந்தமே!
எந்தத் துன்பமும் அப்போது இல்லை.
கடவுலின் விளையாட்டும்
இப்படித்தான்.
அதனால் தான் சொல்கிறார்களோ
குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று என்று.

9. 'யா' மரத்தின் பட்டையை உரித்தது எது? எதற்காக? விளக்குக.

'யா' மரத்தின் பட்டையை உரித்தது ஆண் யானை, பெண் யானையின் பசியைப் போக்க உரித்தது. அதன் மூலம் ஆண் யானை தனது அன்பைப் பெண்யானைக்கு வெயிப்படுத்தியது. பொருளீட்டச் சென்ற தலைவன் பாலை வழியில் அக்காட்சியைக் காண்பான். காட்சியானது தலைவியை நினைவுப்படுத்தும். அதனால் தலைவியைக் காண விரைவில் வருவான் என்பதன் கருத்து.

10. உருவக அணியை எடுத்துக்காட்டுடன் எழுதுக.

உவமையின் தன்மையைப் பொருள்மேல் ஏற்றிக்கூறும் தன்மையே 'உருவகம்' எனக் கூறப்படும். உவமை, உவமேயம் என்னும் இரண்டும் ஒன்றே என்று தோன்றும்படி கூறுவது உருவக அணி ஆகும்.

(எ.கா) **இன்சொல் விளைநிலமா ஈதலே வித்தாக**
வன்சொற் களைகட்டு வாய்மை எருவட்டி
அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈன்றதோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய்.

இப்பாடலில், இன்சொல் – நிலமாகவும், வன்சொல் – களையாகவும், வாய்மை – எருவாகவும், அன்பு – நீராகவும், அறம் – கதிராகவும் உருவாகப் படுத்தப்பட்டுள்ளன.

பொருத்தமான நிறுத்தக் குறியிடுக

ஆசிரியர் மாணவர்களிடம் மாணவர்களே கடவுளரையும் தலைவர்களையும் குழந்தையாகக் கருதி எழுதப்பட்ட சிற்றிலக்கிய வகை பற்றித் தெரியுமா தமிழ்ச் சிற்றிலக்கிய வகைகளுள் பிள்ளைத் தமிழும் ஒன்று என்ற கூறினார்.

பிள்ளைத் தமிழ் நூல்கள் முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ் அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ் முதலியன அடடா என்று சிலிர்ப்பூட்டும் பட்டறிவைப் படிப்பவர்க்கு அளிக்கும் வகையில் குமரகுருபரரின் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் மிகச் சிறந்ததாகத் திகழ்கிறது

விடை:

ஆசிரியர் மாணவர்களிடம், "மாணவர்களே, கடவுளரையும் தலைவர்களையும் குழந்தையாகக் கருதி எழுதப்பட்ட சிற்றிலக்கிய வகை பற்றித் தெரியுமா? தமிழ்ச் சிற்றிலக்கிய வகைகளுள் பிள்ளைத் தமிழும் ஒன்று" என்று கூறினார்.

பிள்ளைத் தமிழ் நூல்கள், முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ், அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ் முதலியன.

'அடடா!' என்று சிலிர்ப்பூட்டும் பட்டறிவைப் படிப்பவர்க்கு அளிக்கும் வகையில், குமரகுருபரரின் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் மிகச் சிறந்ததாகத் திகழ்கிறது.

சொற்றொடர் உருவாக்குக

1. செந்தமிழும் சுவையயும் போல.

   விடை : 'செந்தமிழும் சுவையயும் போல மணமக்கள் இணைந்து வாழ வேண்டும்' எனத் தலைவர் வாழ்த்தினார்.

2. பசுமரத்தாணி போல.

   விடை : என் ஆசிரியர் கற்றத் தந்த உறுப்பிலக்கணம் **பசுமரத்தாணி போல** மனத்தில் பதிந்தது.

3. உள்ளங்கை நெல்லிக்கனி போல்.

   விடை : தமிழின் பெருமை **உள்ளங்கை நெல்லிக்கனி போல்** உலகிற்குத் தெரிகிறது.

4. அத்தி பூத்தாற் போல

   விடை : எப்போதாவது வரும் என் மாமா எங்கள் வீட்டிற்கு வந்தபோது என் தந்தை அவரை நோக்கி, "அத்தி பூத்தாற்போல உங்கள் வருகை இருக்கிறதே" என்றார்.

5. மழைமுகம் காணப் பயிர் போல.

விடை : எங்கள் ஆசிரியர் விடுப்பில் சென்ற போது மாணவர்களாகிய நாங்கள், மழை முகம் காணாப் பயிர்போல வாடினோம்.

பாடலில் காணும் இலக்கிய வடிவங்களையும் அவற்றுக்குப் புகழ் பெற்றோரையும் கண்டறிந்து எழுதுக

வெண்பாவிற் புகழேந்தி; பரணிக்குஓர்
சயங்கொண்டான், விருத்தம் என்னும்
ஒண்பாவிற்கு உயர்கம்பன்; கோவைஉலா
அந்தாதிக்கு ஒட்டக் கூத்தன்;
கண்பாய கலம்பகத்திற்கு இரட்டையர்கள்;
வசைபாடக் காள மேகம்;
பண்பாய் பகர்சந்தம் படிக்காசு
அலாதொருவர் பகர ஒணாதே

- பலபட்டசைச் சொக்கநாதப் புலவர்

1. நளவெண்பா	-	புகழேந்திப் புலவர்
2. கலிங்கத்துப் பரணி	-	சயங்கொண்டார்
3. கம்பராமாயம்	-	கம்பர்
4. மூவர் உலா	-	ஒட்டக் கூத்தர்
5. திருஆமாத்தூர்க் கலம்பகம்	-	இரட்டைப் புலவர்கள்
6. திருவானைக்கா உலா	-	காளமேகப் புலவர்
7. தொண்டை மண்டலசதகம்	-	படிக்காசுப் புலவர்

நயம் பாராட்டுக

“எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும்
தம்முயிர்போல் எண்ணி உள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கிறார்
யாவர் அவர் உளம்தான் சுத்த
சிந்துருவாய் எம்பொருமான் நடம்புரியும்
இடம் என நான் தெரிந்தேன் அந்த
வித்தர்தம் அடிக்குவல் புரிந்திட என்
சிந்தை மிக விழைந்த தாலோ”

- வள்ளலார்

முன்னுரை :

பொருள்களைப் பயன் கருதாது பிறருக்கு வழங்குபவர்களை வள்ளல் என்றோம். ஆனால் அருளாளரும் கவிஞரும் ஆகிய ஒருவர்க்கும் இப்பெயர் அமைந்திருக்கிறது. வள்ளல் என்னும் பெயரோடு ‘ஆர்’ என்னும் பன்மை விகுதியும் ‘வள்ளலார்’ என அழைக்கப்படுகிறார். அவர் யார்? அவர்தாம் வடலூர் இராமலிங்க அடிகள். சமரச சுத்த சன்மார்க்க நெறிகளை வற்புறுத்தியவர் அவர். அவருடைய பாடல் ஒன்று இங்குத் தரப்பட்டுள்ளது. இதில் அமைந்துள்ள நயங்கள் இக்கட்டுரையில் காண்போம்.

கருத்து :

மிகச் சிறிய அளவு கூட வேற்றுமை கருதாமல் எல்லா உயிர்களையும் தம்முடைய உயிர்போல் நினைத்துச் சமமான மனத்தோடு மகிழ்ச்சியோடு விளக்குபவர். யாரோ, அவரது உள்ளமே தூய அறிவு வடிவாய் இறைவன் நடம் இடும் இடம் என தெரிந்துக் கொண்டேன். அந்தப் பண்புடையவர் மேலானவர். அவருடைய திருவடிகளில் பணிந்து அவருடைய கட்டளையை ஏற்று நடக்க என் நெஞ்சம் மிகவும் விரும்புகிறது.

பொருள் நயம் :

மனிதர்களை மட்டுமே அல்லாமல் ஏனையவற்றயும் தம்முயிர் போல் நினைக்க வேண்டும் என்கிறார் வள்ளலார். அவ்வாறே அவர் வாழ்ந்தார். வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினார்: மக்கள் பலரும் பலி இருவதற்காகச் சேவல் ஆடு முதலியவற்றைக் கொண்டு செல்லும்போது வள்ளலார் கண்டு மனம் பதைத்தார்.

எல்லா உயிகளிலும் இறைவன் இருக்கிறான் ஆனால் எல்லா உயிர்களையும் தம்உயிர்ப்போல் நினைப்பவர் மனங்களிலோ இறைவன் ஞானவடிவாய் நடனம் ஆடுவதாய்க் கூறுகிறார். அவர்களை வித்தககர் என்று போற்றுகிறார். சாமர்த்தியம் – கெட்டிக்காரத்தனம் – உடையவர் என்பது பொருள். இது எப்படி? இறைவனது அருளைப் பெறும் வழியை அறிந்தவர்கள் அவர்கள் என்பதுதான். அந்த அடியவ்களுக்குத் தொண்டு செய்ய வள்ளலார் மிகவும் ஆசைப்படுகிறார்.

எதுகை :

எத்துணையும், ஒத்துரிமை, சித்துருவாய், வித்தர் என அடதோறும் எதுகை நயம் அமைந்துள்ளது.

முடிவுரை :

இராமலிங்க வள்ளலாரின் கருணை நெஞ்சம் போற்றி வியப்பதற்கு உரியது. அவருடைய திருவடிகளை வணங்கி அவரது வழி நடப்போம்.

சொற்களைக் கண்டுபிடி

1. புன்பமொப்லமைழி - பன்மொழிப் புலமை
2. யனிநேம்தம - மனத நேயம்
3. கச்வப்ஞ்புசிழ்ச - வஞ்சப்புகழ்ச்சி
4. தைக்விதுகபு - புதுக்கவிதை
5. டுசிப்காட்ஞ்ப் - காஞ்சிப்பட்டு

பொருள் கூறுக.

குரிசில்	-	தலைவன்	தலையளி	-	கருணை
நயம்	-	மேன்மை	உய்த்தல்	-	செலுத்துதல்
இருசு	-	அச்சு			

தொகைச் சொற்களைக் கொண்டு பத்தியைச் சுருக்குக.

சேர, சோழ, பாண்டிய அரசர்களிடம் யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, தரைப்படை ஆகியவை இருந்தன. அவர்கள் மா, பலா, வாழை ஆகிய கனிகளுடன் விருந்தோம்பல் செய்தனர். கிழக்கு, மேற்கு, வடக்கு,, தெற்கு ஆகிய திசைகளில் அவர்களின் ஆட்சிப்புகழ் பரவியிருந்தது. தமிழகத்தின் குறிஞ்சி,

முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நிலங்களில் எள்ள புலவர்கள் இவ்வரசர்களை இம்மையிலும் மறுமையிலும் வாழ்கவென்று வாழ்த்தினர்.

விடை :

மூவேந்தர்களிடம் நால்வகைப் படைகள் இருந்தன. அவர்கள் முக்கனிகளுடன் விருந்தோம்பல் செய்தன. நான்கு திசைகளில் அவர்களின் ஆட்சிப் புகழ் பரவியிருந்நது. தமிழகத்தின் நால்வகை நிரங்களில் உள்ள புலவர்கள் இவ்வரசர்களை இம்மையிலும் வாழ்க என்று வாழ்த்தினர்.

<u>வினைப் பகுதிகளை எச்சங்களாகவும் முற்றாகவும் மாற்றுக.</u>

பூங்கொடி நேற்றுப் பள்ளிக்குச் **<u>சென்று</u>** தன் தோழிகரளக் **<u>கண்டு</u>** மகிழ்ச்சியுடன் **<u>உரையாடினாள்</u>**. பின் வங்கிக்குப்**<u>போய்</u>**த்தான் கூடுதலாகச் **<u>செலுத்திய</u>** தொகையைத் திரும்பப் **<u>பெற்றுக் கொண்டு</u>** வந்தாள். வரும் வழியில் வீட்டுக்கு **<u>வேண்டிய</u>** பொள்களை **<u>வாங்கினாள்</u>**. அங்கு **<u>நின்ற</u>** பேருந்தில் **<u>ஏறி</u>** வீடு **<u>திரும்பினாள்</u>**.

<u>பொருத்தமான தமிழ் எண்களைக் கொண்டு நிரப்புக.</u>

தமிழிலுள்ள மொத்த எழுத்துகள் **<u>உசஎ</u>** ஆகும்: இவை முதலெழுத்து, சார்பெழுத்து என்று **<u>உ</u>** பிரிவாகப் பிரிக்கப்படும்: **<u>கஉ</u>** உயிரெழுத்துக்கள், **<u>கஅ</u>** மெய்யெழுத்துக்கள் ஆகிய **<u>ஙO</u>** எழுத்துகளும் முதலெழுத்துகள் எனப்படும்: இவற்றைச் சார்ந்து பிறப்பவை சார்பெழுத்துகள் என்றழைக்கப்படுகின்றன: சார்பெழுத்துகள் **<u>கO</u>** வகைப்படும்.

தெரிந்து தெளிவோம்

இசைநூல்கள் சில

பஞ்சமரபு, முதுநாரை, முதுகுருகு, பெருநாரை, பெருங்குருகு, பஞ்சபாரதீயம், இசை நுணுக்கம்

ஐம்பெருங்காப்பியங்கள்

சிலப்பதிகாரம்

மணிமேகலை

குண்டலகேசி

வளையாபதி

சீவகசிந்தாமணி

நேதாஜியே தமிழ் வீரர்களைப் பாராட்டி நான் மறுபடியும் பிறந்தால் ஒரு தென்னிந்தியத் தமிழனாகப் பிறக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார்.

– பசும்பொன் முத்துராமலிங்கனார்

தெரியுமா?

வான்படைப் பிரிவு

இந்திய தேசிய இராணுவத்தில் இருந்து 45 வீரர்கள் நேதாஜியால் தேர்வு செய்யப்பட்டு, வான்படைத் தாக்குதலுக்கான சிறப்புப் பயிற்சி பெறுவதற்காக, ஜப்பானில் உள்ள இம்பீரியல் மிலிட்டரி அகடமிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அந்த 45பேர் கொண்ட பயிற்சிப் பிரிவின் பெயர்தான் டோக்கியோ கேடட்ஸ்.

போர்ச் சூழலுக்கு நடுவில் இந்திய தேசிய இராணுவ வீரர்கள் டோக்கியோ செல்வது ஒரு சவாலாக இருந்தது. பர்மாவில் இருந்து காட்டுவழியாகப் பயணம் செய்து சயாம் மரண ரயில் பாதையைக் கடந்து அங்கிருந்து படகு வழியாகத் தப்பிச் சென்று பழைய கப்பல் ஒன்றில் ஏறி, சீறும் அலைகளில் சிக்கித் தவித்து முடிவில் ஜப்பானின் "கியூசு" தீவை அடைந்தனர். அந்தத் தீவு, கடற்படையின் வசம் இருந்தது.

காலை 5 மணிக்கு எழுந்து மூன்று கல் தூரம் ஓடவேண்டும். அப்போது குளிர்,சுழியத்திற்குக் கீழ் இருக்கும். உதடுகள் வெடித்து வலி தாங்க முடியாது. பனிப்புகை படர்ந்த மைதானத்தில் ஓடுவார்கள். மூன்று கல் தூரம் ஓடியதும் ஐந்து நிமிடங்கள் ஓய்வு, பிறகுதான் சிறப்புப் பயிற்சிகள். அதை முடித்துக்கொண்டு அவசரமாகக் குளித்துத் தயாராகி வர வேண்டும்.

– பசும்பொன் மடல், மடல் 32, இதழ் 8,சனவரி 2018, ப.14–16

நேதாஜியின் பொன் மொழி

அநீதிகளுக்கும் தவறான செயல்களுக்கும் மனம் ஒப்ப இடம் தருதல் மிகப் பெரிய குற்றமாகும். நீங்கள் நல்வாழ்வைத் தந்தே ஆக வேண்டும் என்பதுதான் காலத்தால் மறையாத சட்டமாகும். எந்த விலை கொடுத்தாவது சமத்துவத்திற்குப் போராடுவதே மிகச்சிறந்த நற்குணமாகும்.

மனதை மலரவைக்கும் இளங்கதிரவனின் வைகறைப் பொழுது வேண்டுமா?

அப்படியானால் இரவில் இருண்ட நேரங்களில் வாழக் கற்றுக்கொள்.

தெரிந்து தெளிவோம்

நேதாஜியின் பொன்மொழி

விடுதலையினால் உண்டாகும் மகிழ்ச்சியும் சுதந்திரத்தினால் உண்டாகும் மனநிறைவும் வேண்டுமா? அப்படியானால் அதற்கு விலையுண்டு. அவற்றுக்கான விலை துன்பமும் தியாகமும்தான்.

தெரிந்து தெளிவோம்

புறப்பொருள் வெண்பாமாலை என்னும் நூல் புறத்திணைகளைப் பன்னிரண்டாக வகைப்படுத்தியுள்ளது. அவை வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை. (திணையின் உட்கூறு, துறை எனப்படும்.)

பெரியார் எதிர்த்தவை...

இந்தித் திணிப்பு

குலக்கல்வித் திட்டம்

தேவதாசி முறை

கள்ளுண்ணல்

குழந்தைத் திருமணம்

மணக்கொடை

தெரியுமா?

பெரியார் விதைத்த விதைகள்:

கல்வியிலும் வேலை வாய்ப்பிலும் இடஒதுக்கீடு

பெண்களுக்கான இடஒதுக்கீடு

பெண்களுக்கான சொத்துரிமை

குடும்ப நலத்திட்டம்

கலப்புத் திருமணம்,

சீர்திருத்தத் திருமணம் ஏற்பு

தெரியுமா?

1938 நவம்பர் 13இல் சென்னையில் நடந்த பெண்கள் மாநாட்டில் ஈ.வெ.ரா.வுக்குப் 'பெரியார்' என்னும் பட்டம் வழங்கப்பட்டது.

27.06.1970 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் கல்வி அறிவியல் மற்றும் பண்பாட்டு நிறுவனம் (யுனெஸ்கோ) தந்தை பெரியாரைத் 'தெற்கு ஆசியாவின் சாக்ரடீஸ்' எனப் பாராட்டிப் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.

தெரிந்து தெளிவோம்

பெரியார் இயக்கமும் இதழ்களும்

தோற்றுவித்த இயக்கம் – சுயமரியாதை இயக்கம்

தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு –1925

நடத்திய இதழ்கள் – குடியரசு, விடுதலை, உண்மை, ரிவோல்ட் (ஆங்கில இதழ்)

தெரிந்து தெளிவோம்

கைபேசியின் வரவால் இன்று கடிதம் எழுதும் பழக்கம் பெரும்பாலும் இல்லை என்றே சொல்லலாம். கடிதங்களைக் கொண்டு பல வரலாறுகளையும் இலக்கியங்களையும் பரிமாறியிருக்கிறார்கள். கடித வடிவில் புதினங்களும் எழுதப்பட்டுள்ளன. தாகூர், நேரு, டி.கே.சி., வல்லிக்கண்ணன், பேரறிஞர் அண்ணா, மு. வரதராசனார், கு. அழகிரிசாமி, கி. இராஜநாராயணன் முதலானோர் கடித வடிவில் இலக்கியங்கள் படைத்துள்ளனர்.